T. 1542.

கழக வெளியீடு—௧௨௯

# முல்லைப்பாட்டு

## நச்சினார்க்கினியருரையும், விளக்கமும்

卐

ஆசிரியர் :

க. ப. சந்தோஷம் B.A., L.T.,

பண்டிட் அ. நடராஜ பிள்ளை.

卐

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., :
MADRAS & TIRUNELVELI.

Price As. 12

# முல்லைப் பாட்டு

நப்பூதனார்

இயற்றியது

கழக வெளியீடு - ௧௨௯

நப்பூதனார்

இயற்றிய

# முல்லைப் பாட்டு

[நச்சினார்க்கினியர் உரையும் விளக்கமும்]

ஆக்கியோர் :

க. ப. சந்தோஷம்,

பி. ஏ., எல். டி.,

அ. நடராஜ பிள்ளை,

தமிழாசிரியர்,

விக்டோரியா காலேஜ், பாலக்காடு.

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,

திருநெல்வேலி, & சென்னை.

பிரமோதூத—புரட்டாசி

[*Copy Right.*]

**Published by**

*The South India Saiva Siddhanta Works Publishing Society, Tinnevelly, Limited,*

:: *Tinnevelly and Madras* ::

*September 1930.*

*Printed by*

*The Progressive Printers,*

*17, Coral Merchant Street, Madras.*

# முகவுரை

"பத்துப் பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ,
எத்துணையும் பொருட்கிசையி லிலக்கணமில் கற்பனையே,"
என்று மனோன் மணீய ஆசிரியர் அவர்களால் வாயாரப் புகழப் பெற்றுள்ள பத்துப் பாட்டுக்களுள் முல்லைப்பாட்டு மொன்றாகும். இப்பத்துப் பாட்டு முதலிய பழந்தமிழ் நூல்களாகிய சங்கநூல்கள் பலவுங் கரும்பினிலு மினியன வாய் இக்காலப் புதுவது புனைந்த நூல் (Novels)கள் போல் நெஞ்சக மகிழ்விக்கு நேர்மை கொண்டிலங்கினும், உரை நடை மலிந்தவிக்காலத்திற் பார்ப்பாரும் பயில் வாருங் குறைந்து, பதிப்பிப்பாரும் ஊக்கமற்று வருவது தமிழ்த் தாயின் நலனை விரும்புந் தமிழ் மக்கள் பலரு நன்கறிவர். இதனை யோராற்றான் மாற்றுங் கருத்துடனேயே முதற் பணியாக இம் முல்லைப்பாட்டினை நச்சினார்க் கினியர் வரைந்த வுரையா மூன்று கோல்கொண்டு முடிந்த வளவிற் பொருளை விளக்க முன் வந்தோம்.

உச்சி மேற் புலவர் கொள் நச்சினார்க் கினியம் சாலச் சிறந்த வொன்றாம். ஆயினும், அது இலக்கிய வறிவு பெரிது நிறைந்தவர்க்கே யுதவுதலானும், வலிய கொண்டு கூட்டு (அந்வயங்)களால் அன்னாரையே மயங்க வைத்தலா னும், அஃதோருரை நடை யன்றா மாகலானும் இவ்விளக் கம் இலக்கிய வறிவில் எளியருக்கும் பயன்படு மெனக் கருதுகின்றனெம்.

ஒரு நூலைக் கற்கப் புகுமொருவனுக்கு அந்நூலின் கண் ணுள்ள பொருள்பிண்டமாகத் தோன்றினாலன்றி, அந்நூலைக் கற்றலிற் பெரும்பாலு மூக்க முண்டாகாது. ஆகலின், உரை நடையாகப் பாட்டு நுதலிய பொருள் முன்னருரைக்கப் பட்டது. அஞ்ஞான்று பாட்டுப் போக்கு விளக்கமாகவும், புதுவது புனைவு போன்றும், நெஞ்சகத்திற்கு நேர்மையாக வும் காணப்பட்ட படியால், அதனைப் பாட்டின் போக்கின் படியும், நச்சினார்க்கினியர் போக்கின் படியும் பிரிக்கவேண் டியதாயிற்று. அப்பாட்டின் போக்கில் முல்லைத் திணையின் விரிவும், அதனிடையில் அதன் புறத்திணையாகிய வஞ்சி யைப் புகுத்த திறனுங் கண்டு களிக்கற்பாலன.

பின், ஆய்வார்க்கு வேண்டி முல்லைப் பாட்டும், கொண்டு கூட்டின் விரிவினை விளக்க வேண்டி மூலவடிகளி னெண்களுடன் கொண்டு கூட்டுஞ் சேர்க்கப்பட்டுள்ளன. பின்னர்ச் சேர்த்த பாட்டுப் போக்கின்படி யுள்ள பதவுரை யும், நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டின்படியுள்ள பத வுரையும் பாட்டினை யாராய் வார்க்கும், கொண்டு கூட்டின் இயல்புகளை யறிய வேண்டுவார்க்கும் நன்கு பயன்படுமென நம்புகின்றேம். ஏழாவதாகப் பாட்டாராய்ச்சி யொன்று வரைந்துள்ளேம். அது, தமிழ் மொழிக்கே சிறப்பாயுள்ள பொருளிலக்கணத்தை யாராய்வார்க்கு ஒரு வழி காட்டி யாக விருக்கலாமென்பது எங்கள் நம்பிக்கை இன்னும் அருந்தொடரகராதி யொன்றும் அரும்பத வகராதி யொன் றும் சேர்க்கப்பட்டுள்ளன. அவை தமிழ் மொழிகளைத் துருவுவார்க்குத் திறவு கோலாகும்.

இதனை விளக்குவதற்குப் பெரிதும் பயன் பட்டன. உயர் திருவாளர் உ. வே. சாமிநாதய்யரவர்கள் பதிப்பித்த பத்துப் பாட்டும், சைவத் திருவாளர் மறைமலை யடிகள் வரைந்த முல்லைப் பாட்டாராய்ச்சியுமாகிய நூல்களாம். அப் பெரியார் இருவருக்கும் யாம் பெரிதும் நன்றி பாராட்டுகின்றேம். முப்பண்புகளி னியல்பால் எங்களை யறியாது நேர்ந்த வழுக்களைத் தமிழன்பர்கள் எடுத்துக் காட்டியுதவின் நன்றியுடன் ஏற்று அடுத்த வெளியீட்டில் செப்பனிடக் காத்திருக்கின்றேம்.

செந்தமிழ்ச் செல்வியின் பணியே திருப்பணியாகக் கொண்டு திகழும் திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் இதனை அன்புடன் வெளி யிட முன்வந்து உதவிய நன்றியைப் பெரிதும் பாராட்டுவ துடன், இப்பணியைத் தோன்றாத் துணையாய் நின்று எம்மை யூக்குவித்து முடித்தருளிய திருவருளை வழுத்து கின்றேம்.

தமிழன்பர்கள்,

பாலக்காடு, 92-9-30

அ. நடராஜம்.
க. ப. சந்தோஷம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| I. | பாட்டுப்போக்கின்படி யுரை நடை | க |
| II. | நச்சினார்க்கினியர் போக்கின்படி யுரைநடை | கூ |
| III. | பாட்டு | கக |
| IV. | நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டு | உச |
| V. | பாட்டுப்போக்கின்படி பதவுரை | ௩ய |
| VI. | நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டின்படி பதவுரை | ௫க |
| VII. | பாட்டாராய்ச்சி | எஎ |
| VIII. | அருந்தொடரகராதி | அசா |
| IX. | அரும்பத வகராதி | கூய |

# பிழைதிருத்தம்

| பக்க வெண் | வரி யெண் | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| உ | அ | திரிவிக்கிரமம். | திருவிக்கிரமம். |
| சஉ | கஅ | ஷை | ஷை |
| கஎ | க | பாட்டுப்போக்கின் [படி | நச்சினார்க்கினியர் போ [க்கின்படி |
| ரு௰ | கச | திரிவிக்கிரமம் | திருவிக்கிரமம் |
| ருரு | உஉ | வேடர்களுடை | வேடர்களுடைய |
| ருஅ | சு | திரிவிக்கிரமம் | திருவிக்கிரமம் |
| அஅ | கஉ | ஷை | ஷை |
| சுசு | கூ | வலிபணர் | வலிபுணர் |

உ
திருச்சிற்றம்பலம்

நப்பூதனார்

அருளிய

# முல்லைப் பாட்டு

## பாட்டுப் போக்கின்படி யுரை நடை

இஃது ஒரு தலைவன் வேற்று நாட்டின்மேல் படையெடுத்துச் சென்றிருந்தபொழுது, தலைவி அவனைப் பிரிந்ததா லுண்டாகிய வருத்தத்தைப் பொறுத்துக்கொண்டு அவன் வரவை யெதிர்பார்த்து முல்லைவனத்தில் தங்கியிருந்தலைச் சொல்லுமோ ருரைநடையாம்.

இவ்விடத்தில் கார்கால முதலில் வந்து சேருவதாகச் சொல்லித் தலைமகளைத் தேற்றி வேனிற்காலத் தொடக்கத்திற் சென்ற தலைமகன் வரவைக் கார்கால முதற்பெயலன்று எதிர்பார்த்து வருந்திப் பொறுமையை மேற்கொண்ட தலைவியினியல்பைக் காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்த பொன்வாணிகன் மகன் நப்பூதனார் என்ற புலவர் விரித்துக் கூறுகின்றார்.

## கார்காலச் சிறப்பு

ஒருநாள் மாலை வேளை. அது கார்காலத்தின் முதனாள். மேகங்கள் கூட்டமாகக் கிளம்பின; வானெங்கும் பரவி ஒலிக்கின்ற கடனீரையுண்டு வலங்கொண்டெழுந்தன. இந் நிலைமை, சங்கு சக்கரதாரியான மாயோன் வாமனாவதாரத் தில் மாவலிச் சக்கரவர்த்தி வார்த்த தாரைநீர் கையிற்பட்ட மாத்திரத்தில் கிளம்பி திரிவிக்கிரமாவதார மெடுத்துச் சென் றதை யொத்திருந்தது. அங்ஙனம் வலங்கொண்டெழுந்த மேகம் மலைகளில் தங்கிப் பெரும் பெயலாகப் பொழிந் தது.

## விரிச்சி நிற்றல்

அதனைக் கண்ட தலைவி, தனது தலைவர் குறித்துச் சென்ற கார்காலமும் வந்துவிட்டதே, இன்னும் வரக்காண வில்லையே யெனக் கலக்கமுறத் தொடங்கினாள். அதைப் பார்த்த பெருமுது பெண்டிர் அரிய காவலையுடைய தம தூர்க்கு வெளிப்புறத்தே சென்று அங்கோரிடத்தில் வண் டுகள் வந்து மொய்க்கும்படி நெல்லோடு நாழியிலே கொண்டு சென்ற அப்பொழுதலர்ந்த முல்லைப் பூக்களை யும் தூவி, வணங்கி நற்சொற் கேட்டு நின்றார்கள்.

அப்பொழுது பக்கத்திலிருந்த மாட்டுக்கொட்டிலில் சிறிய தாம்பு என்னும் கயிற்றால் காலிலே கட்டப்பட்ட இளங்கன்று தாய்ப்பா லுண்ணாமையாற் சுழன்று வருந்தி யது. அதை நோக்கிய இடைச் சிறுபெண் கன்றினை நோக்கி, 'என்னிளங்கன்றே! வலிய கோலைக் கைக்

கொண்ட இடையர் பின்னின்று ஓட்ட உனது தாய்மாரா கிய பசுக்கள் இப்பொழுதே வந்துசேருவர், பயப்படா தே!' என்று சொன்னாள். அவள் அப்பொழுது குளிரால் நடுங்குகின்ற தனது தோள்களில் தனது கைகளை மாற்றி யிட்டுக் கட்டிக்கொண்டிருந்தாள். இந் நற்சொல்லைக்கேட்ட பெருமுது பெண்டிர் களி கொண்டவர்களாய் வீட்டை நோக்கித் திரும்பினார்கள்.

## தலைவியினாற்றாமை

மாளிகையை யடைந்த பெருமுது பெண்டிர் தலைவி யின்பக்கலிற் சென்று, 'நாங்கள் இப்பொழுது கேட்டுவந்த நற்சொல்லாலும் நினது கணவன் போர்க்குப் புறப்பட்ட காலத்தில் கண்டறிந்து சொன்ன நிமித்திகர் வாய்ப்புள் ளாலும் தலைவர் பகைவர் பூமியைக் கைப்பற்றி அவர் கொடுக்கும் கப்பத்தையுங் கைக்கொண்டு எண்ணிச் சென்ற காரியத்தையு முடித்து வருதலுறுதி. ஆகையால், மாயோய்! நீ உனது வருத்தத்தை விட்டுவிடுவாயாக,' வென விளக்கமாக வற்புறுத்திக் கூறினர். அங்ஙனம் அவர் கள் அவளைத் தேற்றியும் தெளியாதவளாய்த் துயர் மிகுந்து நீலோற்பலங்கள் போன்ற கண்களின்றும் தனித்து விழுகின்ற முத்துக்களைப் போன்று நீர்த்துளி களைச் சிந்தத் தொடங்கினாள்.

## பாடிவீட்டின் சிறப்பு

காட்டாறு சூழ்ந்த பெரிய முல்லை நிலத்தில், நெடுந் தூரம் வாசனை வீசும்படியான பிடவஞ் செடிகளையும்

ஏனைய பச்சைப்புதர்களையும் வெட்டிப் பெரிய படை வீடு அமைக்கப்பட்டிருந்தது. அதற்குப் பக்கத்திலிருந்த எதிரிகளின் எல்லைக் காவலராகிய வேடர்களின் அரண்கள் அழிக்கப்பட்டன. அப் பாடி வீட்டிற்கு அக்காட்டிலுள்ள முட்களே மதிலாக வளைத்துக்கட்டப்பட்டன. அப்பாசறை நீர் நிரம்பிய கடல்போல் விளங்கியது. அங்குத் தழைகளால் வேயப்பட்ட கூரை யொழுங்காயமைந்த தெருவுகளின் நாற்சந்திகளில் மதம் பாய்கின்ற கன்னத்தினையும் சிறிய கண்களையுமுடைய யானைகள் காவலாக நின்றன. அவை செழித்து விளைந்த கரும்புகளோடு, நெற்கதிர்களில் கலந்து கட்டிய அதிமதுரத் தழைகளையும் தின்னுமல் அவற்ருல் தமது நெற்றியைத் துடைத்துக்கொண்டு கைகளைத் தமது மருப்புகளின்மீது ஏற்றிவைத்துக்கொண் டிருந்தன. யானைக்குச் செய்யுந் தொழிலன்றி வேமுென்றும் படியாத யானைப்பாகர்கள் குத்துக் கோலால் கவளத்தைத் தின்னும்படி குத்திக்கொண்டிருந்தார்கள்.

காவியுடையணிந்த துறவிகள் தமது திரிதண்டங்களை யூன்றி அவற்றின் மேல் காவியுடைகளை யுலரவைத்தமை போல, அறப்போருக்கு வெற்றியைக்கொடுக்கும் விற்களை வரிசைப்படவூன்றி அவற்றின்மேல் அம்புக்கூடுகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அவற்றின் மத்தியில் கொழுவாகிய கொம்புகள் அடித்துக் கயிற்ருல் இழுத்துக்கட்டிய கூடாரங்களையமைத்துப் பூவேலை செய்யப்பட்ட குந்தாயுதங்களை யூன்றி அவற்றின் மேல் கேடயங்கள் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. முன்சொன்ன விற்கோட்டையே பாதுகாவலாகப் பல்வேறு விதமான பெரும்படைகள் தங்கியிருக்

கும் கூடாரங்களின் மத்தியில் நீண்ட குத்துக்கோல்க ளோடு கூடிய மதில்போல் பலவர்ணங் கொடுத்துச் செய் யப்பட்ட திரைகளைக்கொண்டு அரசனுக்குத் தனியாக வொரு கோயிலேற்படுத்தப்பட்டிருந்தது.

அங்கு வீரமங்கையர்கள் நெய்யைக் காலுகின்ற திரிக் குழாயைக் கொளுத்திக்கொண்டு முன் ஏற்றப்பட்ட விளக் குகள் அவியுந்தோறும் சென்று சீர்ப்படுத்திக்கொண்டிருந் தார்கள். அப்பெண்கள் வளையலணிந்த முன்கையினையும் கூந்தலசைந்து கிடக்கின்ற முதுகினையும் இரவைப் பகலாக் கும் படியான வொளியைத் தரும் வலிய கைப்பிடியை யுடைய வாள்கள் தமதிடுப்புக் கச்சையில் தொங்குதலையு முடையவர்களாயிருந்தார்கள். நள்ளிரவில், மோசி மல்லி கைப் புதர்கள் காற்றிலசைந்தாற்போல் சட்டையிட்டுத் தலைப்பாகை தரித்த மெய்க்காப்பாளர்கள் தூக்கத்தோ டும் கடமையிற் கருத்தோடும் சூழ்ந்து திரிந்தார்கள்.

நாழிகை வட்டில் கணக்கர் அரசனருகே வந்து வணங்கி, வாழ்த்தி, 'கடல் சூழ்ந்த வுலகத்தை வெல்லுதற் குச் செல்கின்ற காவல்வேந்தே! உனது நாழிகை வட்டிலில் சென்ற நாழிகை யிவ்வளவு' என்று சொன்னார்கள். உட னே யவனர் திருமணி விளக்குங்காட்ட அரசன் புலிச்சங் கிலி விட்டுக் கட்டிய தனது கோயிற்குள் வலிய கயிற்றால் திரையை வளைத்துக்கட்டி வெளியொன்றும் அதனுள் மற் றொன்றுமா யேற்படுத்திய இரண்டறையினுள் உள்ளறையி லுள்ள பள்ளியிற் சென்றமர்ந்தான். விளக்கங்காட்டிய யவ னர் குதிரைச் சம்மட்டி தாழ்ந்து மறைந் துகிடக்கின்ற

வுடையினையும், சட்டையிட்டுப் பயப்படத் தகுந்த தோற் றத்தையும், இயற்கையான வலிமையையுடைய வுடலினையும், அஞ்சாமையையுங் கொண்டவர்களாயிருந்தார்கள். நாவால் பேசமாட்டாது கையாலும் முகத்தாலும் கருத்தைத் தெரி விக்கும் ஊமைகளான சட்டையிட்ட மிலேச்சர்கள் புறவறையி னுட்பாகத்தே காவலாகச் சூழ்ந்து திரிந் தார்கள்.

## தலைவனிருப்பு

அரசன், வீரர்கள் நெருங்கித் தாக்குகின்ற போரி லுண்டாகிய விருப்பத்தால் தூக்கங் கொள்ளாதவனா யிருந் தான்; ஆகவே, எதிரிகளால் வீசி வெட்டிய வாளாயுதம் பாய்ந்து புண்பட்டுப் பெட்டை யானையின் கூட்டத்தை வெறுத்து நின்ற தனது யானையைப் பற்றியும், எதிரிக ளின் யானைகளது துதிக்கைகளைப் பாம்புகள் துடிப்பது போல் துடித்துவிழ வெட்டித் தனது வஞ்சி மாலைக்கு நல்ல வெற்றியைக் கொடுத்துச் செஞ் சோற்றுக் கடன் கழித்துச் சென்ற தனது வீரர்களைப் பற்றியும், கவசத் தைத் துளைத்துக்கொண்டு அம்புகளுடலிற் பாய்ந்ததால் செவிகளைத் தொங்கவிட்டுக் கொண்டு தீனி தின்னாமல் வருந்தும் தனது குதிரைகளைப்பற்றியும் கவலை கொண்ட வனாய் ஒரு கையைப் படுக்கையிலூன்றி, மற்றொரு கையைத் தன் முடியோடு சேர்த்து, தனது படை, இன்று இங்ஙனம் தொந்திருக்க நாளை யெவ்வாறு சண்டையிடுவ தென்பதைத் திர்க்காலோசனை செய்துகொண்டே இனிய நித்திரையை யடைந்தான்.

## முல்லை

பிரிவாற்றாமையாற் கண்ணீர்த் துளிகளைச் சிந்திக்கொண்டிருந்த தலைவி, மாற்றாரைக் கொல்லுதற்கென்று வாங்கி வைத்த வாளைக் கொண்ட கையால் அன்று போரில் தனது வஞ்சிமாலைக்கு நல்ல வெற்றியை யுண்டாக்கியபடியால் சிற்றரசர்கள் தம் மரணகத்திருந்து நடுங்கும்படியாக முரசவாத்தியம் முழங்கும்படியான பாசறையிலே தூங்குகின்ற தனது தலைவனைத் தன் பக்கத்திலே காணாதவளாய்த் துன்புற்று, மனம் தலைவனை நாடிச் செல்லும்படி விடுத்ததும், மனத்தெளிவைக் கெடுத்ததுமான தனிமையோடு கூடியவளாயிருந்தாள்; பின், தலைவன் இவ்விதம் பிரிந்தாலன்றி இவ்வரசியல் நன்கு நடைபெறாது என்றெண்ணிக் கலங்கிய மனத்தைத் தெளிவித்துக் கொண்டாள். கைகளினின்றும் கழன்றோடுகின்ற வளையல்களை மாட்டிக் கொண்டாள். அடிக்கடி மயக்கமும் பெருமூச்சும் அவளையறியாமல் வந்து கொண்டிருந்தன. அதனால், அவள் அம்பாலடிபட்ட மயில்போல் நடுங்கினாள்; ஆபரணங்கள் உடலினின்றும் நழுவின. அவள் பக்கத்தில் பொற்பதுமை யேந்திய அகலிலே விளக்குப் பிரகாசமா யெரிந்துகொண்டிருந்தது. அவள் அமர்ந்திருந்தது ஏழுநிலை மாடம். அம்மாடத்தின் மேலுள்ள கூடுவாய்களினின்றும் அன்று பெய்த மழையால் நீர்த்தாரைகள் வழிந்துகொண்டிருந்தன. அந்நீர்த் தாரைகளினொலி காதுக்கினிமையாயுங் கேட்போர் மனநிலைக்குத் தக்கவாறு கருத்துக்களைக் கொண்டதாயுமிருந்தது. அவள் அவ்வோசையினைத் தன் தலைவன் அவசியம்

அப்பொழுது வந்து சேருவானென்ற உறுதிக்குத் தக்க விதமாய்க் கருதிப் படுத்திருந்தாள்.

### தலைவன் மீட்சி

அப்படிப் படுத்திருந்த தலைவியினது காதுகள் நிரம்பும்படி, மறுநாள், வேகமாகத் திரும்பி வந்த தலைவனது தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் ஆரவாரித்தன. அவன் திரும்பி வந்த விவரமாவது :—எதிரிகளை வென்று அவர்கட் கின்றியமையாத பூமிகளைக் கவர்ந்து கொடுத்த நெருங்கிய பெரிய படையுடனே வெற்றிக்கடையாளமாய்க் கொடியையெடுத்துப் பிடித்து, கொம்பும் சங்கும் முழங்க, செவ்வல் பூமியின்கண்ணுள்ள வழியே வந்து காட்டைக் கடந்து தலைவி தங்கியிருக்கும் எழுநிலை மாடத்தின் கிட்ட வந்து சேர்ந்தான். அச் செவ்வல் பூமியின்கண் ணுள்ள் வழி காயாம்பூச் செடிகள் கண்ணிற்கிடப்பட்ட மைபோல் மலரவும், கொன்றை மரங்கள் பொன்போன்ற பூந்தாதுகளைச் சொரியவும், வெண்காந்தள் கைகளைப்போல் மலரவும், தோன்றிச் செடிகள் இரத்தம் போல் பூக்கவும் பெற்ற சிறந்த காட்டின் மத்தியிலிருந்தது. அக்காடு காலமழையால் செழித்த வரகங் கொல்லையில் முறுக்குண்ட கொம்பினை யுடைய ஆண்மான்களோடு பெண்மான்கள் துள்ளி விளையாட, எதிர்காலத்திற்குப் பெய்யச்செல்லும் வெண்மேகம் தூவும்படியான சிறு தூறலையுடைய கர்ப்பவோட்ட காலமாகிய முன் பனி தொடங்கும் மார்கழித் திங்களில் முற்றிக் காய்ந்துவிடும்படியான வள்ளிச் செடிகள் நிரம்பிய பெருமையைக் கொண்டதாகும்.

# நச்சினார்க்கினியர் போக்கின்படி யுரைநடை

இஃது ஒரு தலைவன் பிறநாட்டின்மேல் படையெடுத்துச் சென்றிருந்த பொழுது அவன் மனைவியாகிய தலைவி அவனைப் பிரிந்ததாலுண்டாகிய வருத்தத்தைப் பொறுத்துக்கொண்டு அவன் வரவை யெதிர்பார்த்து முல்லை நிலத்தில் தங்கியிருந்தலைச் சொல்லுமோருரை நடையாம்.

இவ்விடத்தில் கார்காலத் தொடக்கத்தில் வந்து சேருவதாகச் செப்பித் தலைமகளைத் தேற்றி முன்பனிக் கால முதலிற் சென்ற தலைமகன் வரவைக் கார்கால முதற் பெயலன்று எதிர்பார்த்து வருந்திப் பொறுமையை மேற்கொண்ட தலைவியினியல்பைக் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்த பொன் வாணிகனார் மகன் நப்பூதனார் என்ற புலவர் விரித்துக் கூறுகின்றார்.

தலைவி, தன்னை யொரு நொடியும் விட்டுப் பிரியாது தன்னருகிலிருந்து தன்னைக் களிப்பிக்கும் தலைவன் அரசகார்யமாய்ப் பிரியக் கருதியதனைக் குறிப்பாலுணர்ந்து, இரவுபகல் தூக்கமில்லாதவளாய், தலைவன் தனது எண்ணப்படியே போர்மேற் செல்லுதலா லுண்டானதும் மனக் குழப்பத்தைக் கொடுத்ததுமான தனிமையாலே யுண்டான கவலை நோயால் தன்னுடல் மெலியப் பெற்றாள். அதனால், அவள் கைகளிலுள்ள வளையல்கள் கழன்று விழுந்தன; அவற்றை விழவிடாமற் கைகளில் மாட்டிக்

கொண்டும், சோர்வடைந்தும், அடிக்கடி பெருமூச்சு விட்டுக் கொண்டும், அம்பாலடிபட்ட மயில் போல் நடுங்கினள்; ஆபரணங்கள் நழுவின, நீலோர்ப்பலங்கள் போன்ற மையிடப்பட்ட கண்கள் வெண்முத்தங்கள் தனித்து வீழ்ந்தாற் போன்ற நீர்த்துளிகளைச் சிந்தின. அந்நிலைமையைத் தலைவன் பார்த்து வருத்தமடைந்து தலைவி பொறுக்கமாட்டாளென்று நிச்சயித்து, அவளைத் தேற்றுவதற்காகத் தனது புகழையும் மானத்தையும் எடுத்துக்கூறி வற்புறுத்தியதுடன் மேலான எதிரிகளின் பெருமையையும் விளக்கிச் சொல்லிச் சென்றான். தலைவி, தலைவன்பாலுள்ள அன்பு மிகுதியால் எதிர்கால வாழ்வு எப்படியாமோ வென ஐயமிக்கவளாய்ப் போர்த்தொழில் கள் அரசர்கட்கு இன்றியமையாதன வென்பதையும், போர் காரணமாகத் தலைவன் பிரிதலும் தான் அதைப் பொறுத்திருத்தலும் அத்தன்மையன வென்பதையும் மறந்தவளாயிருந்தாள்.

அப்படியிருக்கின்ற தலைவியை வீட்டிலிருக்கின்ற வயது முதிர்ந்த பெண்கள் ஆற்றுவிக்கக் கருதிப் பின் வருமாறு கூறினார்கள்:—பிரிவாற்றாமையால் நிறம்வேறு பட்டிருக்கின்ற மகளே உனது கணவர் போர்க்குப் புறப்படு முன் படைத்தலைவர்களை நோக்கி, எதிரிகளின் பசுக்கூட்டத்தைக் கவர்ந்து வரும்படி ஏவினார். அவர்கள் அவ்விதமே போர்க் கோலங் கொண்டு சென்று அருகிலுள்ள சிற்றூரில் தங்கினார்கள். அப்பொழுது தம்முடன் வந்துள்ள நிமித்தமறிவோரைப் பார்த்துத் தங்கள் அரசனுக்கு வெற்றிவருமோ வென்று அறிந்து கூறக் கட்டளை

யிட்டனர். அவர்களும் அதற்கிசைந்து அங்கோரிடத்தில் நெல்லையும் மலர்ந்த முல்லைப் பூக்களையும் தூவித் தெய்வத்தை வணங்கி நற்சொற் கேட்டு நின்றார்கள்.

அவ்வேளை யவர்கள் கேட்ட நற்சொல்லாவது, பக்கத்திலிருந்த ஆயர்பாடியிலே யுள்ள மாட்டுக் கொட்டிலில் 'தாம்பு', என்னும் ஒருவகைக் கயிற்றால் காலிலே கட்டப்பட்ட இளங்கன்று தாய்ப்பாலுண்ணாமையா லுண்டான பசித்துயரைத் தாங்கமாட்டாது, தாய் வருகின்ற திக்கை நோக்கிக் கஷ்டப்பட்டது. அப்போது குளிரால் நடுங்குகின்ற தோளின்மேல் தனது கைகளை மாற்றியிட்டுக் கட்டிக்கொண்டு நின்ற இடைச் சிறுபெண் கன்றின் வருத்தத்தைக் காண மாட்டாதவளானாள். ஆகையால், அவள் அதனை நோக்கி, 'எனது இளங்கன்றே! வலிய கோலைக் கைக்கொண்ட இடையர் உனது தாய்மாராகிய பசுக்களை விரைவில் ஓட்டிக்கொண்டுவந்து சேருவர், பயப்படாதே:' என்று கூறினாள். அவ்விதமான மங்கல மொழியை நாங்களும் எங்கள் காதாரக்கேட்டோம். ஆதலால், நமது தலைவர் வஞ்சி சூடிச் சென்று பகைவரை வென்று அவர்கள் பூமியைக் கைப்பற்றி, பின் அவர்களாற் கொடுக்கப்படும் கப்பங் கைக்கொண்டு தாம் எடுத்துக்கொண்ட வினையை முடித்து வருவாரென்பது திண்ணம். அவர் அப்படி வினை முடித்து வருதல் நமக்கு இல்லற நடத்துதற்கு அநுகூலமாகலின் நல்ல காரியமாகும். ஆதலின் நீ உனது மனக்குழப்பத்தாலுண்டான துயரை விட்டுவிடுவாயாக.

இங்ஙனம் பெருமுது பெண்டிர் கூறிய தேறுதலைக் கேட்ட தலைவி, 'ஆம், இவர் கூறுவதுண்மை. நமது தலைவர் இவ்விதம் பிரிந்து சென்றாலன்றி இவ்வரசியல் நன்கு நடைபெறாது,' என்று எண்ணமிட்டவளாய்த் தலைவன் தான் கூறிய கார்காலமாகிய இப்பருவத்தில் தவறாமல் வருவானென்று உறுதிகொண்டு அவன் வரவை எதிர்பார்த்துப் படுக்கையிற் கிடந்தாள். அக்காலம், முதற் பெயல் பொழிந்த கார்காலத் தொடக்கமாகிய வொருநாளில் சிறு பொழுதாகிய பிரிந்தோரை வருத்தும் மாலைவேளையாகும். அக்காலத்திற் பொழிந்த மேகத்தினிலைமை பின் வருமாறு:—

சுதர்சனமென்னும் சக்கிராயுதத்தையும் பாஞ்ச சந்நியமென்னும் வலம்புரிச் சங்காயுதத்தையும் கையிற் கொண்டு திருமகளை மார்பில் தரித்துள்ள திருமால் வாமனாவதாரத்தில் மாவலிச் சக்கிரவர்த்தி, தனக்கு மூவடிப் பூமி தானமாகத் தாரைவார்த்துக் கொடுத்தபொழுது அத்தாரைநீரை யேற்றுக்கொண்டு திரிவிக்கிரமாவதாரமெடுத்து ஆகாயவீதியிற் சென்றதுபோல, மேகமானது ஒலிக்கின்ற குளிர்ந்த கடனீரைத்தாங்கி, வலங்கொண்டெழுந்து மலைகளிற் றங்கிப் பெய்வதற்காகப் பரந்த பூவுலகத்தை வளைத்துக்கொண்டு மிக்க வேகமாகப் புறப்பட்டுவந்து பொழிந்தது. அவள் தங்கியிருந்த மாளிகை முல்லை நிலத்தில் வசிப்பதற்குத் தகுதியாகச் சிறந்து விளங்கிய வோரிடத்தில் எடுத்துக் கட்டப்பட்ட வேழு நிலை மாடமாகும். அவள் அங்ஙனமிருந்தபொழுது அவ்வெழுநிலை மாடத்தின் மேற்பாகத்திற் கட்டப்பட்ட கூடுவாய்களினின்றும் முன்

கண்ட கார்கால மழையாற் சொரியும் மிகுதியான நீர்களி னால் காதுக்கினிய பலவிதமான வொலிகள் உண்டாகிக் கொண்டிருந்தன. அவளுக்கருகில் பொற்பதுமை யேந்திய தகளியிலே பிரகாசமாகிய விளக்கு எரிந்துகொண் டிருந்தது.

அப்படிப் படுத்திருந்தவளுடைய காதுகள் நிரம்பும் படி வெற்றியைத் தோற்றுவித்துக்கொண்டு கொம்புவாத் தியமும் சங்கவாத்தியமு முழங்க திரண்ட பெரிய படைக ளுடன் வேகமாகச் செல்லுங் குதிரைகளை மீண்டும் விரை வாகச் செலுத்தும்படியான செலவினை யுடையவராய்த் தலைவி தங்கியிருக்கும் எழுநிலை மாடத்திற்குப் பக்கத்தில் வந்த தலைவருடையதும் எடுத்துக்கொண்ட வினையை யினிது முடிக்கும் ஆக்க நிரம்பியதுமான பெரிய தேரிலே பூட்டப்பட்ட குதிரைகள் ஆரவாரித்தன. தலைவரங்ஙனம் வந்த வழியினிலையாவது:—

பொடிமணலில் முளைத்து நெருங்கிய இலைகளையுடைய காயாம்பூச் செடிகள் பெண்களின் கண்களில் தீட்டப் பட்ட அஞ்சனம்போல் பூக்கப்பெற்றிருந்தன. கொன் றைப் பூங்கொத்துக்கள் பொன்போன்ற மகரந்தங்களைச் சொரிந்துகொண்டிருந்தன. வெண்காந்தள் மொட்டுகள் உள்ளங்கைகளைப்போல் மலர்ந்திருந்தன. புதர்போல் நெருங்கிய தோன்றிச் செடிகள் உதிரம்போல் புஷ்பித்தி ருந்தன. பருவத்திற்பெய்த நல்ல மழையால் வரகு கொழு மையாய் விளைந்து கர்ப்பவோட்ட காலமாகிய முன்பனி தொடங்கும் மார்கழிமாதத்தில் வானத்திற் செல்கின்ற

வெண்மேகங்கள் தூவிய சிறுதூறல்களாற் படிந்து போயிருந்தது. அவ்விதம் படிந்துபோன கதிரையுடைய வரகங் கொல்லையில் முறுக்குண்ட கொம்பினையுடைய ஆண் மான்களோடு பெண்மான்கள் துள்ளி விளையாடிக்கொண்டிருந்தன. இவ்வித காட்சிகளாற் சிறப்படைந்த அப் பெரிய பாதை, செவ்வல் பூமியாகிய முல்லை நிலத்தில் தலைவி தங்கியுள்ள மாளிகையை நோக்கி வந்துகொண்டிருந்தது.

இனி, தலைவன் போர்க்குச் சென்று திரும்பிவந்த முறையின் விரிவு பின்வருமாறு:—வஞ்சிமாலை சூடிச் சென்று போர்புரிந்த தலைவனது சேனைகள் முதனுண் மாலை எதிரியினுடைய காட்டாறு சூழ்ந்த பரந்த முல்லைநிலத்தில் நெடுந்தூரம் நறுநாற்றமெடுக்கும்படியான பிடவஞ்செடிகளோடு மற்றைப் பச்சைப்புதர்களையும் வெட்டியெறிந்து பகைவர் நிலத்திற்குக் காவலாயிருக்கும் வேடர்களுடைய அரண்களை யழித்து, காட்டு முட்களை மதில்போல் வேலியாக வளைத்துக்கட்டி யொலிக்கின்ற கடல்போல் பரந்த பாசறையை யமைத்து முடித்தார்கள். அங்கோரிடத்திலிடப்பட்ட ஆசனத்தில் தலைவனாகிய அரசன் வீற்றிருந்து ஒருகையை ஆசனத்திலூன்றவைத்துக் கடகமென்னும் ஆபரணத்தை யணிந்த மற்றொரு கையைத் தலையோடு சேர்த்து, அன்று பகற்போரில் தனது எதிரிகள் வீசிவெட்டிய வாள்கள் பதிந்ததால் புண்பட்டுப் பிடியை விரும்புதல் விட்டு நின்ற களிற்றின் தன்மையை நினைத்தும், தோலாற் செய்த கவசத்தைத் துளைத்துக்கொண்டு கூரிய அம்புகள் தமது சரீரத்தில்பாய்ந்ததால் காதுகளைத் தொங்கவிட்டுக் கொண்டு புல்லுண்ணாது வருந்தும் தனது குதிரைகளைப்

பற்றிச் சிந்தித்தும், எதிரிகளினது யானைகளினுடைய பெருத்த துதிக்கைகள் பாம்புகள் துடிப்பதுபோல் துடித்துக் கொண்டு அற்றுவிழும்படி வெட்டி, தாமணிந்த பூந்தாதுகள் நிரம்பிய வஞ்சிமாலைக்கு வெற்றியையுண்டாக்கி, செஞ்சோற்றுக்கடன் கழித்துச் சென்ற தனது வீரர்களை யெண்ணியும், இவ்விதமாகத் தன் படை நொந்திருக்க நாளை யெப்படிச் சண்டையிடக் கூடுமென்பதைச் சிந்தித்துக்கொண்டு மிருந்தான்.

அப்பொழுது வீரர்கள், பகையரசர் நடுங்கும்படி வெற்றிக் களிப்புத்தோன்ற முரசவாத்திய முழங்கும்படியான படைவீட்டில் கூடம்போல் தூண்களை நட்டுக் கயிற்றால் இழுத்துக்கட்டிய கூடாரங்களின் நாற்புறமும் தர்மயுத்தத்திற்கு வெற்றியைக் கொடுக்கும்படியான தமதுவிற்களை வரிசையாக வூன்றி அவற்றின்மேல் அம்புறைத்தூணிகளை மாட்டி, பூவேலை செய்யப்பட்ட குந்தாயுதங்களையும் அவற்றிற்கு அடுத்தடுத்தூன்றி அவற்றின்மேல் கேடயங்களையும் சேர்த்துவைத்தனர். அந்நிலைமை, துறவிகள் தமது முக்கோலாகிய தண்டங்களை வரிசைப்பட நட்டு அவற்றின்மேல் தமது காவியுடைகளை யுலரவைத்திருந்த தன்மையை யொத்திருந்தது. அவர்கள், அப்படி யேற்பட்ட வில்லரண்மே தமது கூடாரங்களுக்குக் கோட்டையாகக் கொண்டு அவற்றிற் குள்ளிருக்கும் பல்வகைப்பட்ட மொழிகள் பேசும்படியான பெரிய படைக்கு நடுவிலே ஒரு தனியிடத்தை யரசனுக்குக் கோயிலாக வேற்படுத்தினர்கள். குதிரைச் சம்மட்டி தமது இடுப்பிலே வளைந்து கிடக்க அதனை மறைத்துக்கொண்டு தாழ்ந்து கிடக்கின்ற

விளிம்பினையுடைய ஆடையினையும், சட்டையிட்ட பயப்ப டுத்தகுந்த தோற்றத்தினையும், இயற்கையாகவே வலிமை நிரம்பிய வுடலினையும், அஞ்சாமையையு முடைய யவனர்கள் அவ்விடத்தில் நீண்ட குத்துக்கோல்களோடு கூடிய மதில்போல் பல வர்ணங் கொடுத்துச் சித்திரிக்கப்பட்ட திரையை வளைத்துக்கட்டி நாற்புறமும் புலிச்சங்கிலிவிட்டு மேன்மையாக வலங்கரித்து ஒரு நல்ல மாளிகையை யுண்டாக்கினர்கள்.

உடனே, தத்துவநெறி கண்டு செல்லுதலில்லாத ஜனங்களின் ஆயுட் காலத்தைக் கண்டறிந்து சொல்லுதலில் வல்ல சோதிடர்கள் அரசன் முன் வந்து வணங்கி, அவன் புகழை விளங்க வாழ்த்தி, 'கடல் சூழ்ந்த வுலகத்திற் பகைவரை வெல்லுதற்குச் செல்கின்ற பார்த்திபனே! கிடாரத்து நீரிலே காணப்படுகின்ற நினது நாழிகைவட்டில் சென்ற நாழிகை யிவ்வளவு,' என்று எடுத்துக்காட்டி, அது அவன் படுக்கைக்குச் செல்ல வேண்டிய காலமென்பதைக் குறிப்பிட்டனர். அதனுல், அரசன் தன்னுடன் வந்துள்ள வீரமங்கையர்கள் மாணிக்கமாகிய விளக்கை யெடுத்துக்காட்ட, வலிய கயிற்றுல் திரையை வளைத்து வெளி யொன்றும் அதனுள் மற்ருென்றுமா யேற்படுத்திய இரண்டறையினுள் உள்ளறையிலிடப்பட்ட படுக்கையிற் யிற் சென்று பள்ளிகொண்டான். அவ்வீரமங்கையர்கள் வளையலணிந்த முன்கையினையும், கூந்தலசைந்து பெயக்கின்ற வழகிய முதுகினையும், இராப்பொழுதைப் பகற்பொழுதாக்கும்படியான பிரகாசமும் வலிய கைப்பிடியு முடைய வாளாயுதங்களைப் பல வர்ணங்களோடு கூடிய

இடுப்புக் கச்சிலே யணிந்த நிலைமையினையுங் கொண்டவர்க ளாயிருந்தார்கள்.

அங்ஙனம் பள்ளிகொண்ட வரசன் வீரர்கள் நெருங்கித் தாக்குகின்ற போரிலுண்டாகிய விருப்பத்தால் நடுநிசி வந்தும் தூக்கங்கொள்ளாது, விடியு மட்டும் விழித்திருந்தான். அந் நடு நிசி, தழையாலே வேயப்பெற்றும் கூரை யொழுங்கா யமைந்ததுமான பாடி வீட்டிலுள்ள தெருவுகளின் நாற்சந்திகளிற் காவலாக நிற்கும் மதம்பாய்கின்ற கன்னத்தினையும் சிறிய கண்களையு முடைய யானைகளானவை கரும்புகளோடு நெற்கதிர்களி னூடே கலந்து கட்டிய அதிமதுரத் தழைகளையுந் தின்னாமல் அவற்றால் தமது நெற்றியைத் துடைத்து அவற்றோடு தமது கைகளைக் கூர்மையான தமது கொம்புகளிடத்தில் ஏற்றி வைத்துக்கொண்டு நிற்க, அதனைக் கண்ட வடமொழியை முறையே படிக்காது யானைப் பேச்சான சில சொற்களை மட்டுங் கற்ற பாகர்கள் அச்சொற்களைப் பலகாற் சொல்லிக் குத்துக்கோலால் கவளத்தைத் தின்னும்படி குத்த, நெய்யை வெளியே விடுகின்ற திரிக்குழாயையுடைய சிற்றாட்கள் தமது திரியைக் கொளுத்திக் கொண்டுபோய் முன்னொழுங்கா யமைத்த விளக்குகள் அவியுந் தோறு மவற்றைச் சீர்ப்படுத்த, நுட்பமாகிய பூத்த மோசிமல்லிகைக் கொடியாலாகிய புதர்கள் குளிர்ந்த காற்றினாலசைவதுபோல் தலைப்பாகை கட்டிச் சட்டையிட்டுக் கொண்டிருந்த தூக்கத்தினையும் கடமையிற் கருத்தினையுமுடைய மெய்க்காப்பாளர் புறவறையின் வெளிப்பாகத்தைச் சூழ்ந்து திரிய, நாவால் பேசமாட்டாது கையாலும் முகத்

தாலும் கருத்தைத் தெரிவிக்கும் ஊமைகளான சட்டை யிட்ட மிலேச்ச தேசத்தவர் புறவறையின் உட்பாகத்தில் சூழ்ந்து திரிய, நீண்ட நாக்கினையுடைய பிரகாசம் பொருந்திய மணியொலித்தல் நின்றுபோன நிலைமைத்தாகும்.

மறுநாள் அவன் அதிகாலையிலெழுந்து காலைக்கடனை முடித்துப் பகைவரைக் கொல்லுதற்கென்று எண்ணிவைத்துள்ள வாளைக் கைக்கொண்டு சென்று அவர்களை வெட்டி வென்று தனக்கு எக்காலமும் சீர்த்தியாகிய விளக்கத்தைக் கொடுக்கும் தனது வஞ்சிமாலைக்கு நன்றாகிய வெற்றியை நிலைபெறச் செய்தான். அதன்பின், அவன் பகைவர்கட்கின்றியமையாத நிலைமையினையுடைய அவர்கள் பூமிகளைக் கைக்கொண்ட வெற்றிக்கு அடையாளமாக, எப்பொழுதும் வெற்றிக்குக் காரணமாக வெடுத்துப் பிடிக்கப்படும் கொடியை யெடுத்துப் பிடித்துக்கொண்டு தன் பருவம் வந்தவுடன் முற்றிவிடும்படியான காயையுடைய வள்ளிச்செடிகள் நிரம்பியுள்ள காட்டைக் கடந்து செவ்வல் பூமியின் கண்ணுள்ள பெருவழியைச் சேர்ந்தான். (அப்பொழுது அவன் தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் தலைவியின் காதுகள் நிரம்பும்படி யாரவாரித்தன).

# முல்லைப் பாட்டு

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்பச்
சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமர னோக்கி யாய்மக
ணடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டன மதனா
னல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து

பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்பக்
கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட
விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி
யுவலைக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவ னின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
யோங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணாது நுதறுடைத்
தயினுனை மருப்பிற்றங் கையிடைக் கொண்டெனக்
கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளங் கைப்பக்
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போ
ரோடா வல்விற் றூணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கைப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவி லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டங் கோலி யகனேர்பு
குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்

கையமை விளக்க நந்துதொறு மாட்ட
நெடுநா வொண்மணி நிழற்றிய நடுநா
ளதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித்துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாளரே மஞ் சூழப்
பொழுதளந் தறியும் பொய்யா மாக்க
டொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
யெறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப
மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் திண்ஞா
ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியு
ளுடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு மிலேச்ச ருழைய ராக
மண்டமர் நசையொடு கண்படை பெறாஅ
தெடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பருஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந் தோறுமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கு மாசிந் தித்து

மொருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிது நினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விர
னகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
யரசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை
யின்றுயில் வதியுநற் காணா டயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியு
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து
மேவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து
பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
விடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
யின்ப லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோ
ளஞ்செவி நிறைய வாலின வென்றுபிறர்
வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி யுயரி வலனேர்பு
வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி
வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள
வெதிர்செல் வெண்மழை பொழியுந் திங்களின்

முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துனைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

# நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டு

(மூலவடிகளினெண்களுடன்)

(தலைவி தன்பால்) [80 (b) வதியுந (a) னின்றுயிற் (c) காணாள், 80] [81. நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு. 81] [82. ஓடுவளை திருத்தியு மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து மேவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து. 84] [23. பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்பத், 23] (தலைவ னதுகண்டு) [80. துயருழந்து. 80] [83. தேற்றியுங்.83] [22, காட்டவுங் (a) காட்டவுங் (c) கலுழ்சிறந்து (b) காணாள். 22] [11. பெருமுது பெண்டிர். 11] (தலைவியை நோக்கி) [18. நல்லோர். 18] [7. அருங்கடி மூதூர் மருங்கிற் போகி. 7] [9. நறுவீ முல்லை யரும்பு. 10] [8. யாழிசை யினவண் டார்ப்ப. 8] [10. அவிழலரி. 10.] [9. நாழிகொண்ட. 9] [8. நெல்லொடு. 8] [10. தூஉய்க் கைதொழுது. 10] [11. விரிச்சி நிற்ப. 11] (அவர் கேட்ட) [17. நன்னர். 17] [18. வாய்ப்புள். 18] [14. நடுங்குசுவ லசைத்த கையள். 14] [13. ஆய் மகள். 13]

(நின்று) [12. சிறு தாம்பு தொடுத்த பசலைக்
கன்றி னுறுதுய ரலமர னோக்கி. 13]
[14. கைய கொடுங்கோற் கோவலர் பின்னின் [குவ
றுய்த்தரத். 15] [16. (b) தாய (a) ரின்னே வரு
(c) ரென்போள். 16] [17. நன்மொழி கேட்டனை [மதனால் 17]
[20. தலைவர் 20] [18. தெவ்வர் முனைகவர்ந்து [கொண்ட
திறையர் வினைமுடித்து வருதல். 20] [20 வாய்வது 20]
[18. நல்ல. 18] (காரியம்) [21. மாயோய். 21] [20. நீ நின்
பருவர லெவ்வங் களை. 21] [21. யென. 21] (அது [கேட்டு)
[82. நீடு நினைந்து. 82.] [1. நேமியொடு வலம்புரி. 2]
[2. தாங்கு தடக்கை. 2] [2. (b) மா (a) பொறித்த. 2.] (மார்பு)
[3. நீர்செல நிமிர்ந்த மாஅல் போல
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண்டு. 5] ]1. நனந்தலை யுலகம் வளைஇ. 1]
[5. எழுந்த கொடுஞ்செல வெழிலி பெரும்பெயல்
பொழிந்த சிறுபுன் மாலை. 6] (யிற்) [85, பாவை
விளக்கிற் பரூஉச்சுட ரழல விடஞ்சிறந்
துயரிய வெழுநிலை மாடத்து முடங்கிறைச்
சொரிதரு மாத்திர ளருவியின் பல்லியி
ழிசை (யினை) யோர்ப்பனள் கிடந்தோ ளஞ்செவி

நிறையக், 89] [24. கான்யாறு தழீஇய வகனெடும்
புறவிற் சேணாறு பிடவமொடு பைம்புத
லெருக்கி வேட்டுப்புழை யருப்ப மாட்டிக்
(a) காட்ட (c) முள் (b) ளிடு (d) புரிசை யேமுற
(a) வளைஇப் (c) புணரி (b) படு நீர் (d) இற் பரந்த
பாடி. 28.] [79. யரசிருந்து. 79] (பாங்குடன்) [75. ஒருகை
பள்ளி யொற்றி (a) யொருகைக் (c) கடகம்
(b) முடியொடு (d) சேர்த்தி. 76] [68. யெடுத்தெறி [யெஃகம்
பாய்தலிற் புண்கூர்ந்து பிடிக்கண மறந்த
வேழம். 69](உள்ளியும்)[72. தோறுமிபு வைந்நுனைப்
பகழி மூழ்கலிற் செவிசாய்த் துண்ணா
துயங்குமாச் சிந்தித்து. 74] (மொப்பில்) [69. வேழத் துப். 69]
[70. (b) பரூஉக்கை (a) பாம்பு பதைப்பனத் (c) [துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோர் (தூய்மை) யுள்ளியும். 73]
[76. நெடிது நினைந்து. 76.] [79. பனிக்கு முரசு முழங்கு பாசறை. 79]
[40. கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கை. 40] (யிற்)
[37. கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போ
ரோடா வல்விற் றூணி நாற்றிப். 39]

[41. பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவில் லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் (a) வேறோர்
(c) அகநேர்பு (b) நெடுங்காழ்க் கண்டங் கோலி. 44]
[59. மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லில். 62]
[55. (b) மாக்கள் (a) பொழுதளந் தறியும் பொய்யாக்
(d) காண்கையர் (c) தொழுது (e) தோன்றவாழ்த்தி
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய் நின்
குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்பக். 58]
[45. குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர். 47]
[63. திருமணி விளக்கங் காட்டித் திண்ஞா [று),
ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியுள். 64], (சென்
[29. உவலைக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவ னின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை [(ரில்
யோங்குநிலைக் கரும்பொடு (b) வயல்விளை (a) கதி
இடை) மிடைந்தி யாத்த (c) வின்குளகுண்ணாது
நுதறுடைத் தயினுனை மருப்பிற் றங்கை [36]
யிடை (யிற்) கொண்டென. 34] [36. கல்லா விளைஞர்
[35. (b) வடமொழி பயிற்றிக் (a) கவைமுட் கருவி
யிற். 35]

[36. கவளங் கைப்ப. 36] [48. நெய்யுமிழ் சுரையர்
நெடுந்திரிக் கொளீஇக் கையமை விளக்க
நந்துதொறு மாட்ட. 49] [51. வதிரல் பூத்த
வாடுகொடிப் படாஅர் சிதர்வர லசைவளிக்
கசைவந் தாங்கு துகின்முடித்துப் போர்த்த
தூங்க லோங்குநடைப் பெருமூ தாளர்
ரேமஞ் சூழ. 54] [65. (b) வுரையா நாவி
(a) னுடைம்பி னுரைக்கும் (c) படம்புகு மிலேச்ச
ருழைய ராக. 66] [50. நெடுநா வொண்மணி
நிழற்றிய நடுநாண். 50] [67. மண்டமர் நகையொடு
கண்படை பெறாது. 67] (மற்றைநாட்) [77. பகை
[வர்ச்
சுட்டிய படைகொ ணோன்விரல். 77] [89. வென்று
89]
[78. நகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி. 78], [89.
[பிறர்,
வேண்டுபுலங் கவர்ந்த. 90.] [91. விசயத். 91] (தா
[லே)
[91. வெல்கொடி யுயரி. 91] [101. முதிர்காய் வள்
[ளியங்
காடுபிறக் கொழிய. 101] [92. வயிர செறியிலைக்
காயா வஞ்சன மலர முறியிணர்க்
கொன்றை நன்பொன் காலக் கோடற்
குவிமுகை யங்கை யவிழத் தோடார்
தோன்றி குருதி பூப்ப. 96] [98. வானம் [பூியுங்
வாய்த்த. 98] [100. வெதிர்செல் வெண்மழை பொ

திங்களில், 100] [98. வாங்கு. 98] (தெள்) [98. கதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகளக். 99]
[97. கான் நந்திய செந்நிலப் பெருவழி. 97]
[91. வலனேர்பு வயிரும் வளையு மார்ப்ப. 92]
[90. வீண்டுபொருந் தானையொடு. 90] [102, துனை பரி துரக்குஞ்
செலவினர் வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட
மா. 103] (க்கள்) [89. ஆலின. 89] (மனங்களித் திட) [103. வே. 103]

குறிப்பு:—

இங்கு இருதலைப்பகரங்களுள் உள்ளன மூலவடிகளிற் றொடர்ச்சியாயுள்ள பாகங்களைக் குறிக்கும் எண்களெனவும், அவற்றிற்குள் ஆங்கில எழுத்துக்களாற் குறிப்பிட்டன இடமாறி நிற்பனவெனவும், இருபிறைக் கோட்டினுள் உள்ளன நச்சினார்க்கினியராலும், இக் கொண்டு கூட்டை மூலமாக்கியோராலும் வரவழைத்துக்கொள்ளப்பட்டன எனவுங் கொள்க.

## பாட்டுப் போக்கின்படி பதவுரை

---

நனந்தலை யுலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி

(பதவுரை) நனந்தலை உலகம் - பரந்த நிலத்தை யுடைய இவ்வுலகத்தை, வளைஇ - வளைத்து, நேமியொடு - சக்கிரத்தோடு, வலம்புரி - வலம்புரிச் சங்கும், பொறித்த- தரித்திருத்தலால், மா - பெருமையை, தாங்கு - தன்னிடத்தே கொண்டிருக்கின்ற, தடக்கை - பெரிய கையில், நீர்செல - மாவலிச் சக்கிரவர்த்தி வார்த்த தாரை நீர் சென்றவுடன், நிமிர்ந்த - (வாமனாவதாரத்தை விடுத்து) திரிவிக்கிரமாவதார மெடுத்த, மால் போல - திருமாலைப் போல், பாடு இமிழ் - மிக்கொலிக்கின்ற, பனிக்கடல் - குளிர்ந்த கடனீரை, பருகி - குடித்து, வலன்ஏர்பு - வலமாகச் சுழன்று எழுந்து, கோடு கொண்டு - மலைகளில் தங்கி, எழுந்த - பெய்வதற்காக வானளாவிச் சென்ற, கொடும் செலவு எழிலி - மிகுந்த வேகத்தையுடைய மேகம்,

(விருத்தியுரை) முல்லைப்பாட்டு - முல்லைத்திணையாகிய கற்பாற்றியிருத்தலைச் சொல்லும் செய்யுள். 'வளைஇ, பருகி, ஏர்பு, கொண்டு, எழுந்த எழிலி,' எனமுடிக்க. 'நிமிர்ந்த மால் போல் எழுந்த எழிலி' என்று உபமான உபமேயத்தைப் பொருத்துக. நேமி, வலம்புரி - சக்கிர உருவமும் சங்குருவமுங் கொண்ட கைரேகைகள். அன்றிப் பஞ்சாயுதங்களுள் இரண்டாம். அவை சுதர்சனம், பாஞ்சசந்நியம். வலம்புரி - வலப்புறமாக முறுக்குண்ட சங்கு. பாடிமிழ் - மீமிசைச் சொல்.

பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை
யருங்கடி மூதூர் மருங்கிற் போகி
யாழிசை யினவண் டார்ப்ப நெல்லொடு
நாழி கொண்ட நறுவீ முல்லை
யரும்பவி ழலரி தூஉய்க் கைதொழுது
பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப

(ப - ரை) பெரும் பெயல் - முதன் மழையாக, பொழிந்த - பெய்த, சிறு புன்மாலை - சிறு பொழுதாகிய பிரிந்தாரை வருத்தும்படியான மாலை வேளையில், (இளவேனிற் றொடக்கத்துப் போர்மேற் சென்ற தலைமகன் தான் கூறிச் சென்றபடி கார்காலம் வந்தும் வாராமையாற் றுன்புறும் தலைமகளைக் கண்டு) அருங்கடி மூதூர் - அரிய காவலையுடைய தமது பழைய முல்லை நிலத்தூரின், மருங்கிற் போகி - பக்கத்திலே போய், (அங்கோரிடத்தில்), யாழிசை இனவண்டு - யாழைப்போ லிசைக்கும் கூட்டமான வண்டுகள், ஆர்ப்ப - ஆரவாரித்துச் சூழும்

படி; நெல்லொடு - நெல்லுடனே, நாழி கொண்ட - நாழியிலே கொண்டு செல்லப்பட்ட, நறுவீ முல்லையரும்பு - நல்ல பூக்களையுடைய முல்லை மொட்டுக்கள், அவிழ் அலரி- அலர்ந்த மலர்களை, தூஉய் - தூவி, கைதொழுது - கையால் வணங்கி, பெருமுது பெண்டிர் - பெரிய வயது முதிர்ந்த பெண்கள், விரிச்சி நிற்ப-நற்சொற் கேட்டு நிற்க, (அப்பொழுது பக்கத்திலிருந்த மாட்டுக் கொட்டிலில்)

(வி - ரை.) 'மாலையில் தலைவன் வரவை யெதிர் பார்த்து வருந்திய தலைவியினிலைமையைக் கண்ட பெரு முதுபெண்டிர் மூதூர் மருங்கிற் போகி, தூஉய், தொழுது, நிற்ப', எனக் கூட்டுக. 'எழிலி பெரும் பெயல் பொழிந்த மாலை' என்க. அப்பொழுதலர்ந்த பூக் களைக் கொண்டு தூவுதலால், 'வண்டார்ப்ப அலரி தூஉய்' என்றார். நெய்தற்றிணையிற் கூறப்படும் இரங்கலை ஈண்டுத் தலைவி யெய்துதல் முரணாகாதோ வெனின், ஆகாது; அஃதெங்ஙனமெனின், ஆண்டு இரங்கலொன்றே கூறப்படும். ஈண்டு இரங்கலும், தேற்றலும், தெளிவும், ஆற்றலுங் கூறப்படும். அன்றியும், இரங்கலே யில்லையாயின் தேற்றலும் ஆற்றலுமில்லையாதல் காண்க. இங்கு விரிச்சி யறிந்து தேற்றுதலை முல்லைக்கலி முதற்பாட்டில், 'அணிமாலை...............குழல்,' என்ற பாகத்தின் உரையாற் காண்க. பூக்களை நாழியிற் கொள்ளல் அவற்றின் மென்மை கருதியென்க.

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றி
னுறுதுய ரலமரனோக்கி யாய்மக

ணடுங்குசுவ லசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவலர் பின்னின் றுய்த்தர
வின்னே வருகுவர் தாய ரென்போ
ணன்னர் நன்மொழி கேட்டன மதனால்

(ப - ரை) சிறு தாம்பு-சிறிய தாம்பு என்னுங் கயிற்றால், தொடுத்த - கட்டப்பட்ட, பசலைக் கன்றின் - இளங்கன்றினது, உறுதுயர் - மிக்க துன்பத்தையும், அலமரல் - சுழற்சியையும், நோக்கி ஆய் மகள் - இடைப் பெண் பார்த்து, நடுங்கு சுவல் - நடுங்குகின்ற தோளின்மேலே, அசைத்த கையள் - கட்டிய கையளாய், கைய கொடுங்கோல் - வளைந்த கோலைக் கைக்கொண்ட, கோவலர் - இடையர்கள், பின்னின்று உய்த்தர - பின்னே நின்று ஓட்ட, இன்னே வருகுவர் தாயர் - தாய்மாராகிய பசுக்கள் இப்பொழுதே வந்து சேரும், என்போள் - என்று சொன்ன இடைப்பெண்ணினது, நன்னர் நன்மொழி - மிகுந்த நன்மையைத் தரும் மொழியை, கேட்டு - கேட்டறிந்து, (தலைவி பக்கத்தில் வந்து அவளை நோக்கி) அனம் - அன்னம் போல்பவளே! அதனால் - அவ்விடைப்பெண் சொன்ன அந் நற்சொல்லாலும்,

(வி - ரை) 'ஆய்மகள் நோக்கி,' எனவும், 'கொடுங்கோல் கைய கோவலர்,' எனவும், 'தாயர் இன்னே வருகுவர்,' எனவும் மாற்றிக் கூட்டுக. கையள் - குறிப்பு வினைமுற்று வினையெச்சமாயிற்று. 'பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப ஆய்மகள் நோக்கி வருகுவ ரென்போள் நன்மொழி கேட்டு,' என முடிக்க.

நல்ல நல்லோர் வாய்ப்புட் டெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருத றலைவர் வாய்வது நீநின்
பருவர லெவ்வங் களைமா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போ லுண்கண் புலம்புமுத் துறைப்ப

(ப - ரை) நல்ல - அறிவாற் சிறந்த, நல்லோர் - (தலைவன் போர்க்குச் செல்லுங்கால் நிமித்தம் பார்த்த) நிமித்திகர், (பார்த்துச் சொன்ன) வாய்ப்புள் - நற்சொல்லாலும், தெவ்வர் முனை - பகைவர்க் கின்றியமையாத பூமியை, கவர்ந்து - கைப்பற்றி, கொண்ட - அவர் கொடுக்க வாங்கிய, திறையர் - கப்பத்தை யுடையவராய், வினை முடித்து - கருதிச்சென்ற கருமத்தை நிறைவேற்றி, வருதல் தலைவர் - தலைவர் திரும்பிவருவது, வாய்வது - உறுதி, (ஆகையால்), நீ நின் - நீ உன்னுடைய, பருவரல் எவ்வம் - துன்பமாகிய நோயை, களை மாயோய் என - மாமை நிறத்தை யுடைய தலைவியே நீக்கி விடுவாயாக வென்று, காட்டவும் காட்டவும் - வற்புறுத்திச்சொல்லியும், காணாள் - உணராதவளாய், கலுழ்சிறந்து - கலக்கமிகுந்து, பூப்போல் உண்கண் - நீலோற்பலங்களைப் போன்ற மையுண்ட கண்கள், புலம்பு முத்து உறைப்ப - தனித்தனியாய் விழுகின்ற முத்துக்களைப்போல் துளிகளைச் சிந்த,

(வி - ரை) 'தலைவர், கவர்ந்து, திறையராய், வினை முடித்து, வருதல் வாய்வது', என முடிக்க. காட்டவும், காட்டவும் - அடுக்குத்தொடர்; மிகுதிப்பொருளது. இது

வரை கார்கால முதற்பெயலன்று தலைவன் வருகையை யெதிர்பார்த்து வாடிய தலைவியினிலைமையைக் கூறி, இனி அத்தினத்திற்கு முன்னாள் தலைவன் வஞ்சிப் போரிட்டுப் பாடி வீட்டி லமர்ந்திருக்கின்ற நிலைமையை விளக்கத் தொடங்குகின்றார். 'தலைவி காணாள், சிறந்து, உண்கண் புலம்பு முத்துறைப்ப, (79) பாசறையின்றாயில் வதியுநன் காணாள்,' என முடிக்க. 'அதனாலும், வாய்ப்புள்ளாலும் தலைவர் வினை முடித்து வருதல் வாய்வது,' என உம்மை விரித்து முடிக்க. புலம்பு - தனிமை.

கான்யாறு தழீஇய வகனெடும் புறவிற்
25 சேணாறு பிடவமொடு பைம்புத லெருக்கி
வேட்டுப்புழை யருப்ப மாட்டிக் காட்ட
விடுமுட் புரிசை யேமுற வளைஇப்
படுநீர்ப் புணரியிற் பரந்த பாடி

(ப - ரை) கான்யாறு தழீஇய - காட்டாறு சூழ்ந்த, அகல் நெடும் புறவில் - பரந்த முல்லை நிலத்திலுள்ள, சேணாறு - நீண்ட தூரம் வாசனை வீசும்படியான, பிடவமொடு - பிடவஞ் செடிகளோடு, பைம்புதல் எருக்கி - பச்சைப்புதர்களையும் வெட்டி, வேட்டுப்புழை அருப்பம் - (பகைவர் நிலத்திற்குக் காவலாக இருக்கின்ற) வேடர்களுடைய அரண்களை, மாட்டி - அழித்து, காட்ட - அக் காட்டின்கண்ணுள்ள, இடு முள் புரிசை - இடப்பட்ட முள்ளாலாகிய மதிலையே, ஏமுற - பாதுகாவலாக, வளைஇ - வளைத்துக்கட்டி, படுநீர்ப்புணரியில் - நீர் நிரம்பிய கடலைப்

போல், பரந்த - பரவியுள்ள, பாடி - (தலைவனது) படை வீட்டில்,

(வி - ரை) ஏமம் + உற - ஏமுற - தொகுத்தல் விகாரம். 'நீர் படுபுணரி,' யென மாற்றுக. புழை - வாசல். இங்கு, தலைவனிலைமை கூறப் புகுந்தவர் படைவீட்டி னியல்பை விரிக்கின்றார்.

உவலைக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவ னின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
யோங்குநிலைக் கரும்பொடு கதிர்மிடைந் தியாத்த
வயல்விளை யின்குள குண்ணாது நுதறுடைத்
தயினுனை மருப்பிற்றங் கையிடைக் கொண்டென

(ப - ரை) உவலைக்கூரை - தழையாலே வேயப்பட்ட கூரையானது, ஒழுகிய - ஒழுங்காயமைந்த, தெருவில் - தெருவின்கண்ணுள்ள, கவலை முற்றம் - நாற்சந்தியாகிய முற்றத்திலே, தேம்படு - மதம்பாய்கின்ற, கவுள - கன்னத்தினையுடைய, சிறுகண் யானை - சிறிய கண்ணையுடைய யானைகளானவை, ஓங்கு நிலைக் கரும்பொடு - ஓங்கி வளர்ந்த நிலைமையினையுடைய கருப்பங் கழிகளோடு, வயல் விளை கதிர் - நன்செய் நிலத்தில் விளைந்த நெற்கதிர்களில், மிடைந்து யாத்த - நெருங்கக் கட்டிப்போட்ட, இன் குளகு - அதிமதுரத் தழைகளையும், உண்ணாது - தின்னாமல், நுதல் துடைத்து - தமது நெற்றியை அவற்றால் துடைத்து, அயில் நுனை மருப்பில் - மிகக் கூர்மையான

தமது கொம்புகளின், இடை - மத்தியில், தம் கைக் கொண்டென - தமது கைகளை வைத்துக்கொண்டு நின்றனவாக.

(வி - ரை) ‘வயல் விளைகதிர்’, எனக் கூட்டுக. ‘மருப்பிடை’, எனப் பிரித்துக் கூட்டுக. இங்கு, முள்ளிடு புரிசையைச் சார்ந்த நாற்புறங்களின் உள்ளமைப்பை விரிக்கின்றார். குளகு - தழை.

கவைமுட் கருவியின் வடமொழி பயிற்றிக்
கல்லா விளைஞர் கவளங் கைப்பக்
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போ
ரோடா வல்விற் றாணி நாற்றிக்
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கை

(ப - ரை) கவைமுள் - கவர்த்த முள்ளையுடைய, கருவியின் - குத்துக் கோலாலே, வடமொழி பயிற்றி - யானைப் பேச்சான வடசொற்களை அடிக்கடி கூறிக் கொண்டு, கல்லா இளைஞர் - யானைக்குச் செய்யுந் தொழிலன்றி மற்றியா தொன்றையும் படியாத இளைய யானைப் பாகர்கள், கவளம் கைப்ப - கவளத்தைத் தின்னும்படி வற்புறுத்த, கல் தோய்த்து உடுத்த - ஆடையைக் காவிக் கல்லிலே துவைத்துடுத்திய, படிவப் பார்ப்பான் - தவவொழுக்கத்தை யுடைய துறவியினது, முக்கோல் - திரிதண்டத்தில், அசைநிலை கடுப்ப - தனது காவியுடையைக் காயவைத்த தன்மையைப் போல், நற்போர் - அறப் போருக்கு, ஓடா - தோல்வியைக் கொடுக்காத, வில்வில் -

வலிய விற்களை, (நாற்புறமும் ஊன்றி அவற்றின்மேல்) தூணி நாற்றி - அம்புக்கூடுகளைத் தொங்கவிட்டு, (அவற்றின் மத்தியில்), கூடம் - கொழுவாகிய முளைக்கொம்புகளை, குத்தி - நட்டு, கயிறு வாங்கு இருக்கை - கயிற்றால் இழுத்துக் கட்டி யமைக்கப்பட்ட கூடாரத்தின், (நாற்புறமும்),

(வி - ரை) 'கல்லா இளைஞர் வடமொழி பயிற்றிக் கவளங் கைப்ப' எனக் கூட்டுக. இங்கு பெரும்படை தங்கும் கூடாரத்தியல்பு கூறுகின்றார். கவைமுட் கருவி - அங்குசமுமாம். யானைப் பேச்சான வடமொழிகள் - ஆது, அப்பூது என்பன.

பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகுநிரைத்து
வாங்குவி லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோர்
நெடுங்காழ்க் கண்டங் கோலி யகநேர்பு

(ப - ரை) பூ தலை-பூ வேலை செய்யப்பட்ட தலைப்பினையுடைய, குந்தம் - குந்தாயுதங்களை, குத்தி - வரிசைப்பட வூன்றி, கிடுகு நிரைத்து - (அவற்றின் மேல்) கேடயங்களை வரிசைப்பட மாட்டி, வாங்குவில் - வளைந்த விற்களாலாகிய (முன் கண்ட) அரணம் - கோட்டை, அரணமாக - பாதுகாவலாகவிருக்க, (அதனுள் வசிக்கும்) வேறு பல் பெரும் படை - வேறுபட்ட பலவிதமான பெரிய சேனையினது, நாப்பண் - மத்தியில், வேறோர் - மற்றொரு விதமான, நெடுங்காழ் - நீண்ட குத்துக்கோல்களையுடைய, கண்டம் - பலவித வர்ணங் கொடுத்துச் சித்திரிக்கப்பட்ட மதில்

திரையை, கோலி - வளைத்துக்கட்டி, அகம் நேர்பு - (அரச னுக்கு) கோயிலேற்படுத்தி, (அதில்)

(வி - ரை) பூந்தலை - மெலித்தல் விகாரம். குந்தாயு தங்களும் கேடயங்களும் கூடாரங்களின் அடைப்புகளாக வும் விற்களும் அம்புக் கூடுகளும் அக்கூடாரத்தி னரணாக வும் அமைக்கப்பட்டன வென்க. இதுவரை பாடிவீட்டி னுட்பாக நிலைமை கூறித் தலைவன் படைவீட்டில் வீற் றிருந்த சிறப்பைக் கூறத் தொடங்குகின்றார்.

குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர் நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்க நந்துதொறு மாட்ட

(ப - ரை) குறும்தொடி - சிறிய வளையலணிந்த,முன் கை - முன்னங்கைகளையும், கூந்தல் அம் சிறு புறத்து - கூந்த லசைந்து கிடக்கின்ற சிறிய முதுகினையும், இரவு பகல் செய்யும் - இராப்பொழுதைப் பகற்பொழுதாக்கும் படியான, திண் பிடி - வலிய கைப்பிடியையுடைய, ஒள் வாள் - ஒளியையுடைய வாளினை, விரவு வரி - கலந்த பல நிறக் கோடுகள்கொண்ட, கச்சில் - அரைக் கச்சையில், பூண்ட - அணிந்த நிலைமையினையுமுடைய, மங்கையர் - வீரப்பெண்கள், நெய்யுமிழ் சுரையர் - நெய்யை வெளியே விடுகின்ற திரிக்குழாயைக் கைக்கொண்டவர்களாய், நெடுந் திரிக் கொளீஇ (தமது குழாயின்கண் ணுள்ள) நீண்ட

திரிகளைக் கொளுத்திக் கொண்டு (போய்),, கையமை விளக்கம் - வேலைப்பாடமைந்த விளக்குகள், நந்துதொறும் - அவியுந்தோறும், மாட்ட - கொளுத்திக்கொண்டு திரிய.

(வி - ரை) சுரையர் - குறிப்பு வினைமுற்று வினையெச்சமாயது. கையமை விளக்கம் நந்துதோறும் - வேலைப்பாடமைந்த விளக்குகளை முக்கியமான விடங்கள்தோறும் (கொளுத்த) என்றுமாம். இப்பாகத்தால் அக்காலத்திற் போர்க்களத்திற் பெண்மக்கள் சென்று வீரமணிகளாய் விளங்கினர் என்பதை யறியலாம்.

நெடுநா வொண்மணி நிழற்றிய நடுநா
ளதிரல் பூத்த வாடுகொடிப் படாஅர்
சிதர்வர லசைவளிக் கசைவந் தாங்குத்
துகின்முடித் துப் போர்த்த தூங்க லோங்குநடைப்
பெருமூ தாள ரேமஞ் சூழ

(ப - ரை) நெடுநா - நீண்ட நாக்கினையுடைய, ஒண்மணி - பிரகாச மாகிய மணியானது, நிழற்றிய - அடங்கிப் போன, நடுநாள் - நள்ளிரவில், அதிரல் பூத்த - மோசி மல்லிகையினது பூவோடு கூடிய, ஆடு கொடி - அசைகின்ற கொடிகளையுடைய, படாஅர் - புதர்கள், சிதர்வரல் - சிறு துளிகளோடு வருகின்ற, அசைவளிக்கு-அசைந்து செல்லும் காற்றுக்கு, அசைவந்தாங்கு - அசைந்தாற்போல, துகின் முடித்து - தலைப்பாகை கட்டி, போர்த்த - சட்டையிட்ட-தூங்கல் ஓங்கு நடை-மிகுந்த தூக்கத்தினையும் கடமையிற்

கருத்தினையுமுடைய, பெருமூதாளர் - மெய்க்காப்பாளர், ஏமம் சூழ - காவலாகச் சூழ்ந்துதிரிய,

(வி - ரை) அரசன் கோயில் ஒடுங்க வேண்டிய நிலைமையை மணியொலி அவித்தறிவித்த லக்கால வியல்பு. 'அதிரற் படாஅர் அசைவந்தாங்கு பெருமூதாள ரேமஞ் சூழ,' எனக் கூட்டுக. பெருமூதாளர் - மிகுந்த பழக்கமும் ஆண்மையுமுடைய மெய்க்காப்பாளர். படாஅர் - படார்; படர்வது: புதர்.

55 பொழுதளந் தறியும் பொய்யா மாக்க
டொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி
யெறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப

(ப - ரை) பொழுது - நாழிகையினை, அளந்து அறியும் - நாழிகை வட்டிலால் கணக்கிட்டுக் கண்டுகொள்ளும், பொய்யா - கடமையிற் றவறுதலில்லாத, மாக்கள் - பெரும்போக்கான அறிவைமட்டுமுடைய (நுட்பவறி வில்லாத நாழிகை வட்டிற்) கணக்கர்கள், தொழுது - (அரசனை முதலில்) வணங்கி, காண்கையர் - (பின்) கண்டுகொண்டவர்களாய், தோன்ற வாழ்த்தி - விளங்க ஆசீர்வதித்து, எறிநீர் வையகம் - கடல் சூழ்ந்த பூமியை, வெலீஇய - வெல்லும்பொருட்டு, செல்வோய் - செல்கின்ற அரசனே, நின் - உன்னுடைய, குறுநீர்க் கன்னல் - கொப்பரை நீரினிலே காண்கின்ற நாழிகை வட்டிலில் (சென்ற) நாழிகை, இனைத்தென் றிசைப்ப - இவ்வளவென்று எடுத்துச் சொல்லியவளவில்,

(வி - ரை) நாழிகை வட்டிலில் நாழிகையைக் கண்டறிந்து கூறுதல் ஸ்தூல வறிவான் முடிதலால், அக்கணக்கரை 'மாக்கள்,' என்றார். மாக்கள் - ஐயறிவினர். "மாவும் மாக்களும் ஐயறிவினவே," (தொல். பொருள். மரபு. சூ. 32) என்பதாற் காண்க. காண்கையர் - குறிப்பு வினைமுற்று வினையெச்சமாயது.

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து
வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லிற்
றிருமணி விளக்கங் காட்டித் திண்ஞா
ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியுள்

(ப - ரை) மத்திகை - குதிரைச் சம்மட்டி, வளைஇய - வளைந்து கிடக்கின்ற, மறிந்து வீங்கு செறிவுடை - (அச் சம்மட்டி) மறையும்படி தொங்குகின்ற நெருக்கமாக இழையோடிய வுடையினையும், மெய்ப்பைபுக்க - சட்டையிட்ட, வெருவருந் தோற்றத்து - பயப்படத் தகுந்த காட்சியினையும், வலிபுணர் யாக்கை - இயற்கையாகவே வலிமை நிரம்பிய வுடலினையும், வன்கண் - அஞ்சாமையையுமுடைய, யவனர் - சோனகர், புலித்தொடர் விட்ட - புலிச்சங்கிலி சூழவிட்ட, புனைமாண் நல்லில் - அலங்கரிக்கப்பட்ட சிறப்பாகிய முன்சொன்ன கோயிலில், திருமணி விளக்கம் - சிறந்த மாணிக்கம் போன்ற விளக்கினை, காட்டி - எடுத்துக் காண்பித்து, திண்ஞாண் - வலிய கயிற்றாலே கட்டப்பட்ட, எழினி - திரையை, வாங்கிய - விலக்கியதால் தோன்றிய,

ஈரறைப்பள்ளியுள் - வெளியொன்றும் அதனுள் மற்றொன்றுமாய்ப் பொருந்திய இரண்டறைகளுள் உள்ளறையினில் போட்டிருந்த படுக்கையுள் (சென்று),

(வி - ரை) 'மத்திகை வளைஇய உடை, மறிந்து வீங்கு செறிவுடை,' எனத் தனித் தனி பொருத்துக. இங்கு அரசன் படுக்கையறையினுள் புகுந்தமை கூறினர். 'யவனர் இல்லில் விளக்கங்காட்டி, வாங்கிய பள்ளி,' யென முடிக்க.

65 உடம்பி னுரைக்கு முரையா நாவிற்
படம்புகு மிலேச்ச ருழைய ராக
மண்டமர் நசையொடு கண்படை பெறாது.

(ப - ரை) நாவின் உரையா(து) - நாவாற் பேசமாட்டாது, உடம்பின் உரைக்கும் - கையாலும் முகத்தாலும் கருத்தைத் தெரிவிக்கும், படம்புகு - சட்டையிட்ட, மிலேச்சர் - மிலேச்ச தேசத்தவர், உழையராக - புறவறையினுட்பாகத்தே காவலாகச் சூழ்ந்து திரிய, மண்டமர் நசையொடு - வீரர்கள் தாக்குகின்ற போரிலுண்டாகிய விருப்பத்தால், கண்படை பெறாது - கண் உறக்கங் கொள்ளாது,

(வி - ரை) உரையா - ஈறுகெட்ட எதிர் மறை வினையெச்சம். உடம்பின் உரைத்தல் - செய்கை (சைகை) காட்டல். ஒடு - கருவிப்பொருளில் வந்தது. நாவின் உரையா உடம்பின் உரைக்கும் என மாற்றிக் கூட்டுக. இங்கு அரசன் துயிலாமை கூறினர்.

எடுத்தெறி யெஃகம் பாய்தலிற் புண்கூர்ந்து
பிடிக்கண மறந்த வேழம் வேழத்துப்
பாம்புபதைப் பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்தி

(ப - ரை) எடுத்தெறி - பகைவர்களால் வீசிவெட்டிய, எஃகம் - வாள், பாய்தலின் - பாய்ந்ததால், புண்கூர்ந்து - காயமிகுதிப்பட்டு, பிடிக்கணம் - பெட்டையானைக் கூட்டத்தை, மறந்து-மறந்துநிற்கின்ற, வேழம் - யானையையும், வேழத்து - எதிரிகளின் யானைகளது, பரூஉக்கை - பெரிய துதிக்கைகள், பாம்பு பதைப்பன்ன - பாம்புகள் வெட்டுண்ட பொழுது துடிப்பதுபோல், துமிய - துடித்துக் கொண்டு விழ, தேம்பாய் கண்ணி - தேன்துளிக்கும் படியான தனது வஞ்சி மாலைக்கு, நல் வலந் திருத்தி-நன்றாகிய வெற்றியை யுண்டாக்கி,

(வி - ரை) 'வேழத்துப் பரூஉக்கை பாம்பு பதைப் பன்னத் துமிய,' என மாற்றுக. பிடிக்கண மறந்த வேழத்தையும், சோறு வாய்த் தொழிந்தோரையும் உள்ளி யென மேலே கொண்டு சேர்க்க. இங்கு அரசன் மனோ நிலையை விரிக்கின்றார்.

சோறுவாய்த் தொழிந்தோ ருள்ளியுந் தோறுமிபு
வைந்நுனைப் பகழி மூழ்கலிற் செவிசாய்த்
துண்ணா துயங்கு மாசிந் தித்தும்

(ப - ரை) சோறுவாய்த்து ஒழிந்தோர் - செஞ்சோற்றுக் கடன் கழித்துச் சென்ற தனது வீரர்களையும், உள்

ளியும் - நினைத்தும், தோல் துமிபு-கவசத்தைத் துளைத்துக் கொண்டு, வைந்நுனைப் பகழி-மிகக்கூர்மையான அம்புகள், மூழ்கலின் - சரீரத்திற் பாய்ந்த படியால், செவிசாய்த்து - காதுகளைத் தொங்கவிட்டுக்கொண்டு, உண்ணாது - தீனி தின்னாமல், உயங்கும் - வருந்தும்படியான, மா சிந்தித்தும் - குதிரைகளையெண்ணியும்,

(வி - ரை) இங்குக் கூறிமுடித்த அரசனது மனோநிலையாற் படைகண்மாட்டுத் தலைவற்கிருந்த பற்று எம்மட்டெனக் காட்டினார். துமிபு - செய்புஎன்னும் வாய்பாட்டு வினையெச்சம். வைந்நுனை - மீமிசைச் சொல்.

75. ஒருகை பள்ளி யொற்றி யொருகை
முடியொடு கடகஞ் சேர்த்தி நெடிதுநினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொ ணோன்விர
னகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி
யரசிருந்து பனிக்கு முரசுமுழங்கு பாசறை.

(ப - ரை.) ஒருகை - ஒருகையை, பள்ளிஒற்றி-படுக்கையி லொன்றும்படி வைத்து, ஒரு கை-மற்றொருகையை, முடியொடு - (தனது) தலையினோடு, கடகம் - கடகம் என்னும் ஆபரணம், சேர்த்தி - பொருந்தும்படி சேர்த்து, நெடிது நினைந்து - (இவ்வாறு தனது படை நொந்திருக்க நாளை யெவ்வாறு போர்செய்யும் என்பதைத் தீர்க்காலோசனைசெய்து, பகைவர்ச்சுட்டிய - பகைவரைக் கொல்லுதற்கென்று கருதிவைத்த, படைகொள் நோன்விரல் - படையைக்கொண்ட வலியகையாலே, நகைதாழ்-விளக்கந்தங்கிய, கண்ணி-தனது வஞ்சியாலைக்கு, நல்வலந்திருத்தி [2] (அன்று

புகற்போரில்) நல்லவெற்றியை யுண்டாக்கியதால், அரசு - சிற்றரசர்கள், இருந்து - தம்மரணகத்திருந்து பனிக்கும் - நடுங்கும்படி, முரசு முழங்கும் - முரசவாத்திய முழங்கும் படியான பாசறை - படைவீட்டில்,

(வி - ரை.) இங்கு அரசன் பள்ளிகொண்டமையும், அவ்வமயம் அவன் உடல் பள்ளியில் அமைந்திருந்த நிலைமையையும் விளக்கினார். ஒற்றி, சேர்த்தி, நினைந்து, பாசறையில், துயில்வதியுநன் எனமுடிக்க. நோன்விரலாலே, கண்ணியின் வலந்திருத்தி, அரசு இருந்து பனிக்கும்படி முழங்கும் முரசு எனக் கூட்டுக. விரல் - கை; ஆகுபெயர். திருத்தி-செய்தென் வாய்ப்பாட்டெச்சங் காரணப் பொருளில் வந்தது.

80. இன்றுயில் வதியுநற் காணா டுயருழந்து
நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு புலம்பொடு
நீடுநினைந்து தேற்றியு மோடுவளை திருத்தியு
மையல் கொண்டு மொய்யென வுயிர்த்து
மேவுறு மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து

(ப - ரை.) இன்துயில் வதியுநன் - இனிது தூங்குகின்ற தலைவனை, காணாள்-(தலைவி தன்னிடத்தே) காணப் பெறாதவளாய், துயருழந்து - துன்பப்பட்டு, நெஞ்சு - மனத்தை, ஆற்றுப்படுத்த - (தலைவன்சென்ற) வழியிலே செலுத்திய, நிறைதபு - மனத்தெளிவைக் கெடுத்த, புலம்பொடு - தனிமையோடு கூடியவளாய், நீடுநினைந்து - (தலைவன் இவ்விதம் பிரிந்தாலன்றி இவ்வரசியல் நன்கு நடைபெறாதென்று) நீள நினைந்தவளாய், தேற்றியும்-கலங்கிய

மனத்தைத்தெளிவித்தும், ஒடுவளை திருத்தியும் - (கைகளினின்றும்) கழன்றோடுகின்ற வளையல்களை (மறுபடியும்) எடுத்து மாட்டிக்கொண்டும், மையல்கொண்டும் - சோர்வடைந்தும், ஒய்யென உயிர்த்தும் - அடிக்கடி பெருமூச்சு விட்டும், ஏ உறு மஞ்ஞையின்) நடுங்கி(யும்)-அம்பாலடிபட்ட மயில்போல் நடுக்கங்கொண்டும், இழை நெகிழ்ந்து(ம்)- அணிகள் கலையப்பெற்றும்,

(வி - ரை.) பூப்போலுண்கண் புலம்புமுத் துறைப்ப (தலைவி) பாசறையில் இன்றுயில் வதியுநற் காணாள், உழந்து, நினைந்து, தேற்றியும், திருத்தியும், கொண்டும், உயிர்த்தும், நடுங்கி, நெகிழ்ந்து சுடர் அழல, மாடத்து அருவியினிசையினை யோர்ப்பனள் கிடந்தோள் என முடிக்க. நிறை-மனத்தை யொருவழிநிறுத்தல்.

85. பாவை விளக்கிற் பரூஉச்சுட ரழல
விடஞ்சிறந் துயரிய வெழுநிலை மாடத்து
முடங்கிறைச் சொரிதரு மாத்திர ளருவி
யின்பல் லிமிழிசை யோர்ப்பனள் கிடந்தோள்

(ப - ரை.) பாவை விளக்கில் - பொற்பதுமையேந்திய அகலிலே, பரூஉச்சுடர் அழல - மிகப்பெரிதாக விளக்குப் பிரகாசிக்க, இடம் சிறந்து - இடமேன்மையால் சிறப்புற்று, உயரிய - உயர்த்துக் கட்டப்பட்ட, எழுநிலை மாடத்து - ஏழு நிலைகளையுடைய மாளிகையிலேயுள்ள, முடங்கிறை - கூடுவாய்களில், சொரிதரும் - (முற்கண்ட முதற் பெயல்மழையால்) சொரியும்படியான, மாத்திரள் அருவி - மிகுதியாகத் திரண்டு விழுகின்ற அருவியினது, இன் பல் இமி

ழிசை - காதுக்கினிமையாய்ப் பலவிதமா யொலிக்கின்ற வோசையினை, ஓர்ப்பனள் - (தன் நாயகன் அவசியம் திரும்பிவருவானென்று கொண்ட உறுதிக்குத் தக்க விதமாய்க்) கருதியவளாய், கிடந்தோள் - படுத்திருந்த தலைவியினது,

(வி - ரை) அருவி - நீர்வீழ்ச்சி. (Water Falls) எழுநிலைமாடம் - எழுப்பி நிறுத்தப்பட்ட நிலையையுடைய மாளிகையுமாம். மழைகாலத்தில் உண்டாம் ஒலி கேட்போர் மனநிலைக்குத் தக்க விதமாய்ப் பலவிதக் கருத்துக்களைத் தோற்றுவித்து இன்பம்பயப்பது நுண்ணுணர்வான் நோக்கும் பலர்க்கு அநுபவத்தில் புலனும்.

அஞ்செவி நிறைய வாலின வென்றுபிறர்
வேண்டுபுலங் கவர்ந்த வீண்டுபெருந் தானையொடு
விசயம் வெல்கொடி யுயரி வலனேர்பு.

(ப - ரை) அஞ்செவி - அழகிய செவிகள், நிறைய - நிரம்பும்படி, ஆலின - ஆரவாரித்தன, வென்று - மறுநாள் எதிரிகளை ஜெயித்து, பிறர் வேண்டுபுலம் - எதிரிகளுக்கு இன்றியமையாத பூமிகளை, கவர்ந்த - கைப்பற்றிக்கொடுத்த, ஈண்டுபெருந்தானையொடு - நெருங்கிய பெரிய படையுடன், விசயம் - வெற்றிக்கடையாளமாய், வெல்கொடி - வெற்றியைக் கொடுக்கும் ஆக்கம் நிரம்பிய தனது கொடியை, உயரி - உயர்த்திப்பிடித்து, வலன்ஏர்பு - வெற்றியை வெளிப்படுத்தி,

(வி - ரை.) கிடந்தோள் அஞ்செவி நிறைய (103) நெடுந்தேர் பூண்ட மா ஆலின, என முடிக்க. அஞ்செவி= அகம்+செவி; செவியினுட்பாக மென்றுமாம்.

வயிரும் வளையு மார்ப்ப வயிர
செறியிலைக் காயா வஞ்சன மலர
முறியிணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடற் குவிமுகை யங்கை யவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கான நந்திய செந்நிலப் பெருவழி.

(ப - ரை.) வயிரும் வளையும் - கொம்பு வாத்தியமும் சங்க வாத்தியமும், ஆர்ப்ப - முழங்க, அயிர - பொடி மணலில் முளைத்த, செறியிலை - நெருங்கிய இலைகளையுடைய, காயா - காசாஞ்செடிகள், அஞ்சனம் மலர - பெண்கள் கண்களிற் றீட்டப்பட்ட மைபோல் பூக்க, முறியிணர்க் கொன்றை - தழைகளையும், பூங்கொத்துகளையுமுடைய கொன்றையானது, நன்பொன் கால - நல்ல பொன்போன்ற பூந்தாதுகளைச் சொரிய, கோடல் குவிமுகை - வெண்காந்தளது குவிந்த மொட்டுக்கள், அங்கையவிழ - அழகிய கை போல் மலர, தோடார் தோன்றி - திரண்ட செங்காந்தள், குருதிபூப்ப - இரத்தத்தைப்போல் புஷ்பிக்க, கானம் நந்திய - காடு செழித்த, செந்நிலப் பெருவழி - செவ்வல் பூமியின்கண் வருகின்ற பெரிய வழியிலேயுள்ள,

(வி - ரை.) 'தானையொடு, உயரி, ஏர்பு, ஆர்ப்ப, பெருவழியிலே மான் உகள, காடு பிறக்கொழிய, துரக்குஞ் செலவினரது நெடுந்தேர்', எனக் கூட்டுக. 'மலர, கால, அவிழ, பூப்ப, நந்திய பெருவழி', எனப் பொருத்துக. தோடார் - இதழ்கள் நிரம்பிய வென்றுமாம்.

வானம் வாய்த்த வாங்குகதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகள
வெதிர்செல் வெண்மழை பொழியும் திங்களின்
முதிர்காய் வள்ளியங் காடுபிறக் கொழியத்
துனைபரி துரக்குஞ் செலவினர்
வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாவே.

(ப - ரை.) வானம் வாய்த்த - நல்ல மழையால் கொழுமையாய் வளர்ந்த, கதிர்வாங்கு வரகில் - கதிர்வெளிப்பட்டுக் கொண்டிருக்கும்படியான வரகங்கொல்லையில், திரிமருப்பு இரலையொடு - முறுக்குண்ட கொம்பினையுடைய ஆண் மான்களோடு, மடமான் - பெண்மான்கள், உகள - துள்ளி விளையாட, எதிர்செல் வெண்மழை - எதிர்காலத்திற்காகப் பெய்யச் செல்கின்ற வெள்ளிய மேகம், பொழியுந்திங்கள் - சிறு தூறலைப்பெய்யும் கார்ப்போட்ட காலமாகிய முன்பனி தொடங்கும் மார்கழித் திங்களிலே, முதிர்காய் - முதிர்ந்து காய்ந்து போகும்படியான, வள்ளியங்காடு - வள்ளிச் செடிகள் நிரம்பியுள்ள காடானது, பிறக்கொழிய - பின்னிட்டுப்போக, துனைபரி - வேகமாகச் செல்கின்ற குதிரைகளை, துரக்கும் - மீண்டும் வேகமாகச் செலுத்தும், செலவினர் - செல்கையை யுடையவராகிய தலைவரது, வினைவிளங்கு - எடுத்துக்கொண்ட காரியத்திற்கு விளக்கத்தைக் கொடுக்கும்படியான, நெடுந்தேர் - நீண்ட தேரிலே, பூண்ட மா - பூட்டிய குதிரைகள்,

(வி - ரை.) வள்ளி - கிழங்கினையுடைய வொருவகைச் செடி. மா ஆலின (89), என்றுகொண்டு கூட்டுக.

நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டின்படி பதவுரை நிக

‘கதிர்வாங்கு’, என மாற்றுக. ஏ - ஈற்றசை. இது தலைவன் வரவுகண்ட வாயில்கள் கூற்று.

# முல்லைப் பாட்டு

## நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டின்படி பதவுரை.

தலைவி தன்பால் வதியுந னின்றுயிற்
காணாள் நெஞ்சாற்றுப் படுத்த நிறைதபு
புலம்போ டோடுவளை திருத்தியு மையல்
கொண்டு மொய்யென வுயிர்த்து மேவுறு
மஞ்ஞையி னடுங்கி யிழைநெகிழ்ந்து..........

(ப - ரை.) தலைவி தன்பால் - (தலைவனது பிரிவா லுண்டாகிய துன்பத்தினைப் பொறுத்துக்கொண்டு முல்லைநிலத்திலிருந்த) தலைவி தன்னிடத்திலே, வதியுநன் - தங்கிக் களிப்பிக்கும் தலைவனையும், இன் துயில் - உடலின் நலத்திற்கின்றியமையாத தூக்கத்தினையும், காணாள் - காணப்பெறாதவளாய், நெஞ்சாற்றுப் படுத்த - தலைவன் தனது எண்ணம் செலுத்திய வழியே சென்றமையால் (தனக்கு) உண்டான, நிறைதபு புலம்போடு - உள்ளத்தினிலைகொண்ட வமைதியைக் கெடுத்த தனிமையாலே, (உடல் மெலிய அதனால்), ஓடுவளை - தன் கைகளினின்றும் கழன்று விழுகின்ற வளையல்களை, திருத்தியும் - விழாதபடி கைகளில் மாட்டிக்கொண்டும், மையல் கொண்டும் - மூர்ச்சையுற்றும், ஒய்யென வுயிர்த்தும் - அடிக்கடி பெருமூச்சுவிட்டும், ஏவுறு மஞ்ஞையின் - அம்பாலடிபட்ட மயில்போல், நடுங்கி(யும்)-

(சரீரம்) நடுங்கப்பெற்றும், இழை நெகிழ்ந்து(ம்) - ஆபரணங்கள் (உடலினின்றும்) நழுவப்பெற்றும்,

(வி - ரை.) முல்லைப்பாட்டு - தலைவனைப் பிரிந்த தலைவி பிரிவாற்றாமையைப் பொறுத்துக் கற்பாற்றியிருத்தலாகிய அகப்பொருளை விரித்துக்கூறும் செய்யுள். முல்லை - ஒரு வகைப்பூ; அது பின் நிலத்தை யுணர்த்தி, பின் அந்நிலத்தில் நடக்கும் 'இருத்தல்', ஆகிய வொழுக்கத்தை யுணர்த்தியதென்பர் ஒரு சாரார். மற்றொரு சாரார் அவ்வொழுக்கத்திற்கே அப்பெயருரித்தென்பர். மக்களின் வாழ்க்கைக்குத் துயில் இன்றியமையாததாயின்பம் பயத்தலின் 'இன்றுயில்', என்றார். ஒய் - விரைவுக்குறிப்புச்சொல். நடுங்கி, நெகிழ்ந்து - உம்மை தொக்கன. தலைவி, தன்பால் - வரவழைக்கப்பட்ட பதங்கள்.

.....................பூப்போ
லுண்கண் புலம்புமுத் துறைப்பத் தலைவ
னதுகண்டு துயருழந்து தேற்றியுங் காட்டவுங்
காட்டவுங் கலுழ்சிறந்து காணாள் பெருமுது
பெண்டிர் தலைவியை நோக்கி நல்லோ
ரருங்கடி மூதூர் மருங்கிற் போகி

(ப - ரை.) பூப்போல் உண்கண் - நீலோற்பல மலர் போன்ற மை தீட்டப்பெற்ற கண்கள், புலம்பு முத்து உறைப்ப(வும்) - தனித்தனியாய் விழுகின்ற முத்துக்களைப்போல் நீர்த்துளிகளைச் சிந்திக்கொண்டு (மிருக்க), தலைவன் அது கண்டு - தலைமகன் அதனைப்பார்த்து, துயர்

உழந்து - (தானும்) வருத்தமுற்று, தேற்றி - (தலைவி பொறுக்க மாட்டாளென்று தனக்குள்) நிச்சயித்து, காட்டவும் காட்டவும்—தனது புகழையும் மானத்தையும் எடுத்து வற்புறுத்திக் காட்டுதலோடு மேலான எதிரிகளுடைய பெருமையை யெடுத்துக் காட்டியும், கலுழ்சிறந்து காணாள் - போர்த்தொழில்களும் அவற்றாலேற்படும் பிரிவுகளும் அரசர்கட் கின்றியமையாதன வென்பதை மறந்து கலக்க மிக்கவளாயிருந்தாள், பெருமூது பெண்டிர்-(வீட்டிலுள்ள) வயது முதிர்ந்த பெண்கள், தலைவியை நோக்கி - (அங்ஙனங் கலங்கியிருந்த) தலைமகளைப்பார்த்து, நல்லோர் - (நினது கணவன் போர்க்குப் புறப்படுமுன் தன் படைத்தலைவர்களை நோக்கிப் பகைவர் பசுக்களைக் கவர்ந்துவரக் கட்டளையிட்டனன். அவர்கள் அவ்வாறே புறப்பட்டுப் பக்கலிலுள்ள வோரிடத்தில் தங்கி, தங்கள் கூடவந்த நிமித்திகரை நோக்கித் தமது அரசனுக்கு வெற்றி வருமோ வென்று கேட்க உடனே) நிமித்திகர், அருங்கடி மூதூர் மருங்கில் - சிறந்த காவலையுடைய பழைய வூரின் பக்கத்தில், போகி - சென்று,

(வி - ரை.) உறைப்ப - உம்மை தொக்கது. தேற்றியும் - உம்மை அசை நிலைப் பொருளது. முதுமை + ஊர் =மூதூர். போகி – குச் சாரியை பெற்றுவந்த 'செய்து', என்னும் வாய்பாட்டு வினையெச்சம். தலைவன், அது கண்டு, தலைவியை நோக்கி,—வரவழைக்கப்பட்ட பதங்கள். 'நல்லோர் போகி விரிச்சி நிற்ப', எனப் பின்னர்க் கூட்டுக, தலைவன் தனது புகழையும் மானத்தையும் எதிரிகளது

பெருமையையும் எடுத்துக் காட்டியது, தனது புகழும் மானமும் நிலைபெறல் அவசிய மென்பதும் எதிரிகளின் பெருமையைத் தொலைக்காவிடில், தனது புகழும் மானமும் நிலைபெறா வென்பதுங் கருதி.

நறுவீ முல்லை யரும்பி யாழிசை
யினவண் டார்ப்ப விழலரி நாழிகொண்ட
நெல்லொடு தூஉய்க் கைதொழுது விரிச்சி
நிற்ப வவர் கேட்ட நன்னர் வாய்ப்புள்
நடுங்குசுவ லசைத்த கைய ளாய்மகள்

(ப - ரை.) நறுவீ முல்லை அரும்பு - மண நாறுகின்ற பூக்களையுடைய முல்லை மொட்டுக்கள், யாழ் இசை - யாழினது ஓசையைப்போல் ஒலிக்கும், இனம் வண்டு - கூட்டமாகிய வண்டுகள், ஆர்ப்ப - ஆரவாரித்து மொய்க்கும்படி, அவிழ் அலரி - மலர்ந்த மலர்களை, நாழி கொண்ட - நாழியிலே கொண்டுபோயிருந்த, நெல்லொடு - நெல்லுடனே, தூய் - தூவி, கைதொழுது - தெய்வத்தை வணங்கி, விரிச்சி நிற்ப - நற்சொற் கேட்டு நிற்க, அவர் கேட்ட - அந் நல்லோரால் கேட்கப்பட்ட, நன்னர் வாய்ப்புள் - நன்றாகிய மங்கலச் சொல்லாகிய, நடுங்கு சுவல் - குளிரால் நடுங்குகின்ற தோளின்மேல், அசைத்த கையள் - மாற்றியிட்டுக் கட்டிய கையளாகிய, ஆய்மகள் - இடையர் மகள்,

(வி - ரை.) தூய்—'போய்,' என்பது போன்ற 'செய்து', என்னும் வாய்பாட்டு வினையெச்சம், விரிச்சி - வேண்டிய

பொருளின் விளைவு நன்கறிதற், கீண்டிருண் மாலைச் சொல்லோர்த்தன்று,'' என்ற புறப்பொருள் வெண்பா மாலைச் சூத்திரத்தால், கருதிய கைகூட நற்சொற் கேட்டலென்பது பெறப்படும். ஆயின், அது குறிஞ்சியின் புறமாகிய வெட்சித்திணையின், வந்த வாறும், இது முல்லைப் பாட்டாமாறுங்கொள்ளின் முரணும். அம்முரணொழியவே யுரையாசிரியராம் நச்சினார்க்கினியர் தங் கொண்டு கூட்டால் குறிஞ்சியின் புறமாகிய வெட்சிப் போரில் நிகழ்ந்தவற்றைப் பெருமுது பெண்டிர் கூற்றாகக் கொண்டிங்கு கூறுகின்றார். ஆகவே, தலைவன் பிரிவுசென்ற முன்பனிப் பருவத்தில் நேர்ந்ததாகவும், அக்காலத்தொரு நாண் மாலையிலேயே விரிச்சி நிகழ்ந்ததாகவுங் கொள்ளக் கிடக்கின்றது. தூஉய் - இசை நிறையளபெடை. அவர், கேட்ட - வரவழைக்கப் பட்ட பதங்கள். 'ஆய்மகள் நோக்கி, வருகுவர்,' எனப்பின் வருவன வற்றோடொட்டுக.

நின்று சிறு தாம்பு தொடுத்த பசலைக்
கன்றி னுறுதுய ரலமர னோக்கி
கைய கொடுங்கோற் கோவலர் பின்னின்
றுய்த்தாத் தாய ரின்னே வருகுவ
ரென்போ ணன்மொழி கேட்டன மதனால்

(ப - ரை.) நின்று - (பக்கத்திலுள்ள மாட்டுக் கொட்டிலில்) நின்றுகொண்டு, (அங்கே), சிறு தாம்பு தொடுத்த - சிறிய தாம்பு என்னுங் கயிற்றாலே காலில் கட்டப்பட்ட, பசலைக் கன்றின் - இளைய பசுவின் கன்றானது, உறுதுயர் - (பாலுண்ணாமையால்) உண்டான பசித்துன்பத்தால், அல

மரல் - சுழன்று வருந்துதலை, நோக்கி - பார்த்து, (பொறுக்க மாட்டாதவளாய்), கைய கொடுங்கோல் - கையின் கண் வலிய கோலையுடைய, கோவலர் - இடையர்கள், பின்னின்று உய்த்தர - பின்னிருந்து ஓட்டுதலைச் செய்ய, தாயர் இன்னே வருகுவர் - உனது தாய்மார் இப்பொழுதே வந்து சேர்வார்கள், என்போள் நன்மொழி - என்று சொன்ன அவளுடைய வாய்ச் சொல்லை, கேட்டனம் - யாங்களும் எங்கள் காதாரக் கேட்டோம், அதனால் - அங்ஙனங் கிடைத்த நன்னிமித்தத்தின் பயனாக,

(வி - ரை.) நின்று - வரவழைக்கப்பட்ட பதம். தாம்பு - ஒருவகைக் கயிறு, உறுதுயர் - மிக்கதுயருமாம். 'ஆய்மகள் நின்று, நோக்கி, வருகுவர் என்போள்,' எனக் கூட்டுக. அலமரல் - துடிதுடித் தலுமாம். பசுமை + அல் + ஐ = பசலை; பசிய தன்மையீண்டிளமைக் காயிற்று. 'கொடுங்கோல் கைய கோவலர்,' எனக் கூட்டலுமாம். கன்றின் - இன் சாரியை.

தலைவர் தெவ்வர் முனைகவர்ந்து கொண்ட
திறையர் வினைமுடித்து வருதல் வாய்வது
நல்ல காரியம் மாயோய் நீநின்
பருவர லெவ்வங் களையென வதுகேட்டு
நீடு நினைந்து......................................

(ப - ரை) தலைவர் - (வஞ்சி சூடிச்சென்ற) நமது தலைவர், தெவ்வர் முனைகவர்ந்து - எதிரிகளுடைய நிலத்தைக் கைப்பற்றி, கொண்ட திறையர் - பின் அவர்களிடத்தில்

வாங்கிய கப்பத்தைக் கைக்கொண்டவராய், வினைமுடித்து- தாமெடுத்துக்கொண்ட காரியத்தை முடிவுபெறச் செய்து, வருதல் வாய்வது - வருவது திண்ணம். நல்ல காரியம் - (அவர் அங்ஙனம் வெற்றியுடன் வருவது நமது இல்லறத் திற்கு) நன்மை பயக்கக்கூடிய காரியமாகும். மாயோய் - மாமை நிறத்தையுடைய தலைவியே, நீ நின் பருவரல் எவ் வம் - நீ உன் மனக் குழப்பத்தாலுண்டாகிய துன்பத்தை, களையென - நீக்கி விடுவாயாக வென்று சொல்ல, அது கேட்டு - அதனைக் கேட்டு, (தலைவி), நீடு நினைந்து - இங் ஙனம் தனது தலைவன் பிரிந்தாலன்றி இவ்வரசியல் நன்கு நடை பெறாது என்று நீள நினைந்தவளாய்,

(வி - ரை.) மாமை நிறம் - ஆம்பற்றண்டை நாருரித் தெடுத்தாற் போன்ற நிறம். 'பெருமுது பெண்டிர், அதனால், வருவது வாய்வது எவ்வங்களை யென,' என்று கூட்டுக. காரியம், அது கேட்டு - வரவழைக்கப்பட்ட பதங்கள். நீடு நினைந்து மாடத்து (33) இசையினை (55) "யோர்ப்பனள் கிடந்தோள்" என மேல்வருவனவற்றோடு கூட்டுக.

..................நேமியொடு வலம்புரி
தாங்கு தடக்கை மாபொறித்த மார்பு
நீர்செல நிமிர்ந்த மாஅல் போல
பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு
கோடுகொண்டு நனந்தலை யுலகம் வளைஇ
எழுந்த கொடுஞ்செல வெழிலி..............

(ப - ரை.) நேமியொடு வலம்புரி - சுதர்சனமென்னும் சக்கிரத்தையும் பாஞ்ச சந்நியமென்னும் சங்கையும், தாங்கு தடக்கை - தரித்துள்ள பெரிய கைகளையும், மா பொறித்த மார்பு - திருமகளை வைத்துள்ள மார்பினையுமுடைய, நீர் செல - (மூவடி மண் தானம் வாங்கிய காலத்தில் மாவலிச் சக்கிரவர்த்தி தாரை வார்த்துக்கொடுத்த) நீரானது கையிற்பட்ட வளவிலே, நிமிர்ந்த-குருகிய வாமன வடிவத்தை விட்டுத் திரிவிக்கிரமாவதாரங்கொண்டு வானளாவிய, மால் போல - திருமாலைப்போல, பாடு இமிழ் பனிக்கடல் - மிக்கொலிக்கின்ற குளிர்ந்த கடனீரை, பருகி வலன் ஏர்பு - உண்டு வலங்கொண்டெழுந்து, கோடு கொண்டு - மலைகளில் தங்கி, நனந்தலை யுலகம் - பரந்த விடத்தையுடைய வுலகத்தை, வளை இ - (பெய்வதற்காக) வளைத்துக்கொண்டு, எழுந்த - மேற்கிளம்பிய, கொடுஞ் செலவு எழிலி - மிக்க விரைவினையுடைய மேகம்,

(வி - ரை.) மாஅல் - இசை நிறையளபெடை. பாடிமிழ் - ஒரு பொருட் பன்மொழி. 'தடக்கையினையும் மார்பினையுமுடைய மால்', எனக் கூட்டுக. வலம்புரி -வலப்புறமாக முறுக்குண்ட சங்கு. மார்பு - வரவழைக்கப்பட்ட பதம். நேமி, வலம்புரி - திருமாலின் பஞ்சாயுதங்களில் இரண்டு.

............பெரும் பெயல்
பொழிந்த சிறுபுன் மாலையிற் பாவை
விளக்கிற் பரூஉச்சுட ரழலவிடஞ்சிறந்
தியரிய வெழுநிலை மாடத்து முடங்கிறைச்

சொரிதரு மாத்திர ளருவியின் பல்லிமி
ழிசையினை யோர்ப்பனள் கிடந்தோள்............

(ப - ரை.) பெரும்பெயல் - முதற்பெயலாக, பொழிந்த - கார்கால மழைபெய்த, சிறுபுன் மாலையில் - சிறு பொழுதாகிய பிரிந்தாரை வருத்தும் மாலை வேளையில், பாவை விளக்கில் - பொற்பதுமை யேந்திய தகளியிலே, பரூஉச்சுடர் அழல - பெரிய விளக்கு எரிய, இடம் சிறந்து உயரிய - வசித்தற்கு வாகான இடத்தில் மேன்மையா யுயர்த்துக் கட்டப்பட்ட, எழுநிலை மாடத்து - எழுநிலைகளை யுடைய மாடத்திலே, முடங்கு இறை சொரிதரும் - கூடு வாய்களில் சொரியும்படியான, மாத்திரள் அருவி - மிகுதி யாகத் திரண்டு விழுகின்ற நீர்த்தாரைகளாலுண்டாகிய, இன்பல் இமிழிசை - இனியவாய்ப் பலவிதமா யொலிக் கின்ற வோசையினை, ஓர்ப்பனள் - தலைவன் தான் கூறிய படி தவறாமல் வருவானென்ற வெண்ணத்திற்கிசைவாகக் கருத்திற்கொண்டவளாய், கிடந்தோள் - படுத்திருந்த தலை வியினுடைய,

(வி - ரை.) பரூஉச்சுடர் - இன்னிசையளபெடை. பிரிந்தாரை (தனித்திருந்தாரை) வருத்துதல் புன்மைக் குணமாதலின், 'புன்மாலை', என்றார். பெரும்பெயல் - கார் கால முதன்மழை. இதனையே முன் ' தலைப்பெயல்', (முருகு ௯) என்றார். பொற்பதுமை கையில் தகளி கொடுத்து விளக்கேற்றலும், எழுநிலை மாடம் அமைத்தலுமாகிய சிற் பங்கள் அக்காலத்திலேயே சிறப்புற்றமை காண்க. முடங்கு இறை - கூடுவாய்; கூரையில் மூலைகளின் பொருந்

துவாய். அப்பொருத்துவாய்களினின்றும் விழுநீர்த்தாரைகளினொலி கேட்பவர் மனநிலைக்குத் தக்கவாறு இன்பமாய்ப் பல்வேறு கருத்து (மனோபாவங்களை)க் கொடுத்தலின் ' இன்பல்லிமிழிசை', என்றார். இல், இன், ஐ -' வர வழைக்கப்பட்டன.

...............அஞ்செவி
நிறையக் கான்யாறு தழீஇய வகனெடும்
புறவிற் சேணாறு பிடவமொடு பைம்புத
லெருக்கி வேட்டுப் புழையருப்ப மாட்டி
காட்ட முள்ளிடு புரிசை யேமுற
வளைஇப் புணரிபடு நீரிற் பரந்த
பாடி...............

(ப - ரை.) அஞ்செவி நிறைய - காதுகள் நிரம்பும்படி, கான்யாறு தழீஇய - காட்டாறு சூழ்ந்த, அகல் நெடும் புறவில் - அகன்ற நீண்ட காட்டினுள்ளே, சேண் நாறு பிடவமொடு - நெடுந்தூரம் வாசனை வீசும்படியான பிடவஞ்செடியோடு, பைம்புதல் எருக்கி - மற்றைப் பச்சைப் புதர்களையும் வெட்டி, வேட்டுப்புழை யருப்பம்மாட்டி - (பகைவர் நிலத்திற்குக் காவலாகவுள்ள) வேடர்களுடைய அரண்களையும் அழித்து, காட்டமுள்ளிடு புரிசை - காட்டு முட்களாலிடப்பட்ட வேலியாகிய மதிலை, ஏமம் உறவளைஇ- கோட்டையாக வளைத்துக்கட்டி, புணரி படு நீரில் - அலைகளோடு கூடிய கடலைப்போல, பரந்தபாடி - பரவியுள்ள பாசறையிலே,

(வி - ரை.) அகம்+செவி=அஞ்செவி; செவியினுட்டுளே. பிடவம் - ஒருவகைச்செடி; முல்லைக்கருப்பொருள்களிலொன்று. பசுமை+புதல்=பைம்புதல். ஏமம்+உற=ஏமுற; தொகுத்தல் விகாரம். புணரி - தம்முட்புணர்வது; அலை. 'கிடந்தோள் அஞ்செவி நிறைய, செலவினர் (107) நெடுந்தேர் பூண்ட மாக்கள் ஆலின', என மேல் வருவனவற்றோடு கூட்டுக. 'பாடியில் அரசிருந்து, ஒற்றி, சேர்த்தி, நெடிது நினைந்து, இல்லில் எழினி வாங்கிய ஈரறைப் பள்ளியுட்சென்று, கண்படை பெறாது, மற்றை நாள் வென்று, காடு பிறக்கொழிய, பெருவழியில் துணைபரிதுரக்கும் செலவினர் வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட மாக்கள்', என்று முடிக்க. இப்பாகம் எதிரிகளின் நிலத்தில் அரசனது படைகள் பாடிவீடமைத்தமையை விளக்கியது. இதுவரை கார்கால முதனாண் முன்னிரவு தலைவிகற்பாற்றியிருந்தமைகூறி, இனி, அதற்கு முதனாள் தலைவன் பாடிவீட்டிலிருத்தலும் மாறுநாளாகிய அன்று பகைவரை வெட்டி வென்று முன்னிரவு திரும்பி வருதலும், வருங்கால் அவனது தேரில் பூட்டப்பட்ட குதிரைகள் தலைவி செவிகள் நிரம்பும்படி ஆரவாரித்தலும் கூறத் தொடங்குகின்றார்.

................யரசிருந்து பாங்குட னொருகை
பள்ளி யொற்றி யொருகைக் கடகம்
முடியொடு சேர்த்தி..............

(ப - ரை.) அரசு இருந்து - அரசன் வீற்றிருந்து, பாங்குடன் - ஒழுங்காக, ஒருகை பள்ளி ஒற்றி - ஒருகையை

ஆசனத்திலூன்ற வைத்து, ஒரு கைக் கடகம் முடியொடு சேர்த்தி - மற்றொரு கையை அதிலணிந்துள்ள கடகம் தலையிலே படும்படியாகச் சேர்த்து,

(வி - ரை.) பாங்குடன் - வரவழைக்கப்பட்ட பதம். இப்பாகம் அரசன் வீற்றிருத்தலில் உடலினிருப்பை விளக்கியது. கடகம் - ஒருவகையணி. சேர்த்தி - 'செய்து,' என்னும் வாய்பாட்டு வினையெச்சம்; இதனைப் பின்வரும் 'உள்ளி,' யென்னும் வினையெச்சத்தோடு கூட்டுக. பள்ளி - படுக்கை; ஈண்டு தங்கு மிருக்கையைக் குறித்தது.

............எடுத்தெறி யெஃகம்
பாய்தலிற் புண்கூர்ந்து பிடிக்கண மறந்த
வேழ முள்ளியுந் தோறுமிபு வைந்நுனைப்
பகழி மூழ்கலிற் செவிசாய்த் துண்ணா
துயங்குமாச் சிந்தித்து மொப்பில் வேழத்துப்
பரூஉக்கை பாம்பு பதைப்பனத் துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலந் திருத்திச்
சோறுவாய்த் தொழிந்தோர் தூய்மை யுள்ளியு
நெடிது நினைந்து..........................

(ப - ரை.) எடுத்து எறி எஃகம் - எதிரிகள் வீசி வெட்டிய வாளாயுதம், பாய்தலின் புண்கூர்ந்து - பாய்ந்தபடியால் புண்ணேய் மிகுந்து, பிடிக்கணம் மறந்த - பெண் யானைகளினுறவை மறந்து நின்ற, வேழம் உள்ளியும் - தனது ஆண்யானைகளினிலைமையை யெண்ணியும், தோல் துமிபு - கவசத்தைத் துளைத்துக்கொண்டு, வைந்நுனைப்

பகழி - மிகக் கூர்மையான அம்புகள், மூழ்கலின் - தமதுடலில் வந்து புகுந்த படியால், செவிசாய்த்து - காதுகளைத் தொங்கவிட்டுக்கொண்டு, உண்ணாது - தீனி தின்னாது, உயங்கும் - வருந்தும்படியான, மா சிந்தித்தும் - தனது குதிரைகளினிலைமையை யோசித்தும், ஒப்பில் - மேலான, வேழத்து - (எதிரிகளுடைய) யானைகளினது, பருக்கை - பெரிய துதிக்கைகள், பாம்பு பதைப்பு அன்ன - பாம்புகள் வெட்டுண்டபோது துடிப்பது போல், துமிய - (துடித்துக் கொண்டு) வெட்டுண்டு விழும்படி வெட்டி, தேம்பாய் கண்ணி - தேன் துளிக்கும்படியான தாமணிந்துள்ள வஞ்சி மாலைக்கு, நல்வலங் திருத்தி - நல்ல வெற்றியையுண்டாக்கி, சோறு வாய்த்து - தம்முடைய செஞ்சோற்றுக் கடனைக் கழித்து, ஒழிந்தோர் - போர்க்களத்து மடிந்த வீரர்களது, தூய்மை உள்ளியும் - மேன்மையை நினைத்தும், நெடிது நினைந்து - இவ்வாறு தன்படை நொந்திருக்க நாளை எவ்வாறு போர் செய்வது என்பதைத் தீர்க்காலோசனை செய்து,

(வி - ரை.) உள்ளியும், ஒப்பில், தூய்மை - வரவழைக்கப்பட்ட பதங்கள். தோல் - தோலாற்செய்த குதிரைக்கவசம். வைந்நுனை - ஒருபொருட் பன்மொழி. தேம்பாய் கண்ணியை வஞ்சிமாலையென்றது முல்லைநிலத்தில் நடக்கும் வஞ்சிப்போர்கருதி. இப்பாகம் வீற்றிருந்த அரசனது மனப்போக்கை விளக்கியது. பரூஉக்கை. இன்னிசை யளபெடை.

……………பனிக்கு முரசுமுழங்கு பாசறை
கூடங் குத்திக் கயிறுவாங் கிருக்கையிற்
கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப நற்போ
ரோடா வல்விற் றூணி நாற்றிப்
பூந்தலைக் குந்தங் குத்திக் கிடுகு நிரைத்து,

(பத - ர.) பனிக்கும் - (பகைவர்களை) நடுங்கச்செய்யும், முரசு முழங்கு பாசறை - முரச வாத்தியம் ஒலிக்கும்படியான (முன்கண்ட) படைவீட்டில், கூடங்குத்தி - கூடமாகக் கால்களை நட்டு, கயிறு வாங்கு இருக்கையில் - கயிற்றை யிழுத்துக் கட்டியமைக்கப்பட்ட கூடாரத்தினைச் சுற்றி, கல்தோய்த்து உடுத்த - (உடையைக்) காவிக்கல்லில் துவைத்துக்கட்டிய, படிவப் பார்ப்பான் - நோன்புகளைக் கைக்கொண்ட துறவி, (தனது காவியுடையை) முக்கோல் அசைநிலை கடுப்ப - முக்கோலில் இட்டு உலரவைத்த தன்மையைப்போல, நற்போர் ஓடா வல்வில் - முறைப்படி நடத்துகின்ற போரில் தோல்வியைத்தராத வலிய விற்களை, (வரிசைப்பட ஊன்றி), தூணி - அம்புறைத்தூணிகளை, நாற்றி - அவற்றின் மேல் தொங்கவிட்டு, பூந்தலைக் குந்தம் - பூவேலை செய்யப்பட்ட கைப்பிடியையுடைய எறிவேற்களை, குத்தி - (வரிசைப்பட) நட்டு, கிடுகு நிரைத்து - கேடயங்களை அவற்றின்மேற் சேர்த்து,

(வி - ரை.) இல் - வரவழைக்கப்பட்டது. 'தூணி நாற்றி', என்றதால் விற்களையூன்றியென்று கூறப்பட்டது. இங்கு அப்படைவீட்டில் படைத்தலைவர்களும் பேர்பெற்ற

நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டின்படி பதவுரை கூறி

வீரர்களும் தங்கியிருக்கவமைத்த கூடாரத்தியல்பு கூறி இயல்பாய் நிகழும் வில்லரணத்தை விளக்குகின்றார். இக் காலத்தில் போர்வீரர்கள் தமது துபாக்கிகளை மும்மூன் ருக வூன்றி அவற்றின்மேல் தோற்கச்சைகளை யிடுமாறுங் காணத்தக்கது.

வாங்குவில் லரண மரண மாக
வேறுபல் பெரும்படை நாப்பண் வேறோ
ரகநேர்பு நெடுங்காழ்க் கண்டங் கோலி

(ப - ரை.) வாங்கு - (இங்ஙனம் கூடாரத்தைச்) சூழ நிறுத்தப்பட்ட, வில் அரணம் - விற்கோட்டையே, அரண மாக - காவலாக, வேறு பல் பெரும்படை நாப்பண் - (இவ்விதமாக அமைக்கப்பட்டிருக்கும் கூடாரங்களில் வசிக்கும்) பல்வேறு பாஷைகள் பேசும்படியான பெரிய படைக்கு நடுவிலே, வேறு ஓர் - தனியான வோரிடத்திலே, அகம் நேர்பு - (அரசனுக்கு) கோயிலேற்படுத்தி, நெடுங் காழ்க் கண்டங்கோலி - நீண்ட குத்துக் கோல்களுடனே பலவித நிறத்தால் பலவாகச் செய்யப்பட்ட மதிள் திரையை வளைத்து வைத்து,

(வி - ரை.) முரசு முழங்கு பாசறையிலுள்ள கூடாரங்களிலமர்ந்த பெரிய படைக்கு நடுவிலே வேறோர் 'அகநேர்பு', என்று கூட்டுக. கண்டம் - சட்டங்கள் கொடுத்து மதில்போல் செய்யப்பட்ட திரை (Screen).

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்க வெருவருந் தோற்றத்து.

வலிபுணர் யாக்கை வன்கண் யவனர்
புலித்தொடர் விட்ட புனைமா ணல்லில்,

(ப - ரை) மத்திகை வளைஇய - குதிரைச் சம்மட்டி வளைந்து கிடக்கின்ற, மறிந்து வீங்கு செறிவுடை - அச்சம்மட்டியை மறைத்துக்கொண்டு தொங்குகின்ற விளிம்பினை யுடைய ஆடையினையும், மெய்ப்பை புக்க - சட்டையிட்ட, வெருவருந் தோற்றத்து - பயப்படத் தகுந்த காட்சியினை யும், வலிபுணர் யாக்கை - இயற்கையான வலிமையை யுடைய வுடலினையும், வன்கண் - அஞ்சாமையையுமுடைய, யவனர் - சோனகர், புலித்தொடர் விட்ட - புலிச்சங்கிலி விட்டு அமைக்கப்பட்ட, புனைமாண் நல்லில் - அழகு செய் யப்பட்ட மேலான நல்ல மனையிலே,

(வி - ரை.) 'அகநேர்பு யவனர் புனை மாணல்லில்', என வொட்டுக. 'மத்திகை வளைஇய உடை, மறிந்து வீங்கு செறிவுடை', என விருபாலுங் கூட்டுக. இங்கு அர சன் கூடாரவமைப்புக் கூறப்பட்டது. புலித்தொடர் - ஒருவகைச் சங்கிலி; அன்றிப் புலியின் உருவங்களை யொன் றனோடொன் றமைத்திரும்பினால் செய்யப்பட்ட சங்கிலி யென வூகித்தலுமாம்.

மாக்கள் பொழுதளந் தறியும் பொய்யாக்
காண்கையர் தொழுது தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்நின்
குறுநீர்க் கன்ன லினைத்தென் றிசைப்ப,

(ப - ரை.) மாக்கள் - பகுத்தறிவில்லாத மனிதர்களது, பொழுது — ஆயுட்காலத்தை, அளந்து அறியும் - கணக்கிட்டுரைக்க வல்ல, பொய்யாக் காண்கையர் - தவறுதலில்லாத அறிவினையுடைய கணிதவல்லோர், தொழுது - (அரசனை) வணங்கி, தோன்ற வாழ்த்தி — விளங்க ஆசீர்வதித்து, (அவனை நோக்கி), எறிநீர் வையகம் - அலை வீசுகின்ற கடல்சூழ்ந்த பூவுலகிலுள்ள பகைவரை, வெலீஇய - வெல்லும் பொருட்டு, செல்வோய் - செல்கின்ற தலைவனே, நின்குறுநீர்க் கன்னல் - உனது கொப்பரை நீரிலே மிதக்கின்ற நாழிகை வட்டிலில் சென்ற நாழிகை, இனைத்தென்று இசைப்ப - இவ்வளவென்று (எடுத்துக்காட்டி அது அவன் படுக்கைக்குச் செல்ல வேண்டிய காலமென்று) சொல்லுகையினாலே,

(வி - ரை.) மாக்கள் ஐயறிவை மட்டுமுடைய மனிதர்கள்; இதனை "மாவும் மாக்களும் ஐயறிவினவே", (தொல் - பொருள். மரபு - 32) என்பதனாற் கொள்க. உண்மையை யூன்றி யுணரும் பகுத்தறிவில்லார்க்கே நாளும் கோளும் ஊழும் முன்னிற்குமாகலின் 'மாக்கள் பொழுதளந்தறியும்', என்றார். இது "வேயுறுதோளி", என்ற பதிகத்தில் "பங்கன்..............என் உளமே புகுந்தவதனால் ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பிரண்டுடனே ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே" என்ற சம்பந்தர் வாக்கால் வலியுறும். குறுநீர்க் கன்னல் - நாழிகை வட்டில்; இது ஒரு கொப்பறையில் நீர் நிரப்பி அதில் சிறு துவாரத்தோடு

கூடிய வட்டிலையிட்டு அவ்வட்டிலில் நீர் நிரம்புங்காலம் நாழிகையெனக் கணக்கிடப்படுவது.

குறுந்தொடி முன்கைக் கூந்தலஞ் சிறுபுறத்
திரவுபகற் செய்யுந் திண்பிடி யொள்வாள்
விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்
திருமணி விளக்கங் காட்டித் திண்ஞா
ணெழினி வாங்கிய வீரறைப் பள்ளியுள்

(ப - ரை.) குறுந்தொடி முன்கை - சிறிய வளையலணிந்த முன்கையினையும், கூந்தல் அம் சிறு புறத்து - கூந்தல் தொங்குகின்ற அழகிய சிறிய முதுகினையும், இரவு பகல் செய்யும் - இரவையும் பகலாக்கும்படியான, திண் பிடி ஒள்வாள் - வலிய கைப்பிடியையுடைய பிரகாசம் பொருந்திய வாளாயுதத்தை, விரவு வரிக்கச்சில் — பலவித வர்ணங்களோடுகூடிய இடுப்புக் கச்சையிலே, பூண்ட — அணிந்த நிலைமையினையுமுடைய, மங்கையர் - வீரமங்கையர்கள், திருமணி விளக்கம் காட்டி - அழகிய மாணிக்கம் போன்ற விளக்கத்தை யெடுத்துக்காட்டி, (முன்னே செல்ல), திண்ஞாண் - வலிய கயிற்றாலே, எழினி வாங்கிய - திரையை வளைத்துச் செய்யப்பட்ட, ஈரறைப் பள்ளியுள் - வெளியொன்றும் அதனுள் மற்றொன்றுமாயமைத்த இரண்டறைகளுள் உள்ளறையிலேற்படுத்தியுள்ள படுக்கையினிடத்தே.

(வி - ரை.) இப்பாகம் அக்கால மங்கையர் போர்க் கோலத்தோடு அமர்க்களத்திருந்தமையையும், அரசன்

பள்ளியறையினியல்பையும் விளக்குகின்றது. திருமணி விளக்கம் - மாணிக்கமாகிய விளக்கு எனலுமுண்டு. விரவுவரி - பல நிறங்கலந்த கோடுகள். கூந்தல் - பெண்களின் தலைமயிர். இரவு பகல் செய்யும் ஒள்வாளென்க.

சென்று, உவலைக் கூரை யொழுகிய தெருவிற்
கவலை முற்றங் காவ னின்ற
தேம்படு கவுள சிறுகண் யானை
யோங்குநிலைக் கரும்பொடு வயல்விளை கதிரி
லிடைமிடைந் தியாத்த வின்குள குண்ணாது.

(ப - ரை.) சென்று - போய்ப்பள்ளி கொண்டு, உவலைக் கூரை - தழையாலே வேயப்பட்ட கூரையானது, ஒழுகிய தெருவில் — ஒழுங்காயமைந்துள்ள தெருவிலே பொருந்திய, கவலை முற்றம் - நாற்சந்தியாகிய முற்றத்திலே, காவல் நின்ற - காவலாக நிற்கும் படியான, தேம்படுகவுள - மதம் பாய்கின்ற கன்னத்தினையுடைய, சிறு கண்யானை - சிறிய கண்களோடு கூடிய யானைகளானவை, ஓங்கு நிலைக்கரும்பொடு - செழுமையான கரும்புகளோடு, வயல்விளை கதிரில் - நன் செய்யில் விளைந்த நெற்கதிர்களில், இடைமிடைந்துயாத்த - ஊடே கலந்து கட்டிய, இன்குளகு - இனிய அதிமதுரத்தழைகளையும், உண்ணாது - தின்னாமல்,

(வி - ரை.) சென்று, இல், இடை, - வரவழைக்கப் பட்ட பதங்கள். கவலை முற்றம் - நாற்சந்திகளில் உள்ளகாலியிடம். 'தேம்படுகவுள யானை,' 'சிறுகண் யானை', எனப் பிரித்துக் கூட்டுக. இங்கு மதங்கொண்ட யானைகளி

னியல்பு கூறி நடுநிசியின் சிறப்புக் கூறத்தொடங்குகின்றார். தழையால் வேயப்பட்ட கூரையோடு கூடிய வீடுகள் சாதாரணப்படைவீரர்களுடையனவாம்.

நுதறுடைத் தயினுனை மருப்பிற் றங்கை
யிடையிற் கொண்டெனக் கல்லா விளைஞர்
வடமொழி பயிற்றிக் கவைமுட் கருவியிற்
கவளங் கைப்ப நெய்யுமிழ் சுரையர்
நெடுந்திரிக் கொளீஇக் கையமை விளக்க
நந்துதொறு மாட்ட ..........

(ப - ரை.) நுதல் துடைத்து - (தமது) நெற்றியை (அவற்றால்) துடைத்து, அயில் நுனை மருப்பில் – கூர்மையான நுனியை யுடைய தமது கொம்பில், (ஏற்றிவைத்துள்ள), தம் கையிடையில் – தங்கைகளில், கொண்டென - அவற்றைக் கொண்டு நிற்க, கல்லா இளைஞர் - வடமொழிநய முறையே கற்காத சிறு வயதுடைய யானைப் பாகர்கள், வடமொழி பயிற்றி - யானைப் பேச்சான சில வட சொற்களைப் பல தடவை சொல்லி, கவைமுட் கருவியின் - இரண்டு முட்களாகப் பிரித்துச் செய்யப்பட்ட அங்குசம் என்னும் கருவியினால், கவளம் கைப்ப - கவளத்தைத்தின்னும்படி வற்புறுத்தியூட்ட, நெய்யுமிழ் சுரையர் - நெய்யை வெளியே விடுகின்ற கருவிகளையுடைய சிற்றாட்கள், நெடுந்திரிக் கொளீஇ - (தமது) நீண்ட திரிகளைக் கொளுத்திக் கொண்டு போய், கையமை விளக்கம் - முன்பு ஏற்பட்ட வரிசையான விளக்குகள், நந்துதொறும் - அவியுந்தோறும், மாட்ட - சேர்ப்படுத்த,

நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டின்படி பதவுரை எக

(வி - ரை.) இல் - வரவழைக்கப்பட்ட பதம். கல்லா விளைஞர் வடமொழி பயிற்றலாவது:—அப்புது, அப்புது; ஆது, ஆது; ஐ, ஐ என்பது; கவளம் - யானையினுணவு. கொளீஇ : சொல்லிசையளபெடை. கையமை விளக்கம் - பாசறையிலேற்றப்பட்ட விளக்குகள்.

..................அதிரல் பூத்த
வாடுகொடி படாஅர் சிதர்வர லசைவளிக்
கசைவந் தாங்கு துகின்முடித்துப் போர்த்த
தூங்க லோங்குநடைப் பெருமூ தாள
ரேமஞ் சூழ ..............

(ப - ரை.) அதிரல் பூத்த - மோசி மல்லிகையினது பூவோடு கூடிய, ஆடுகொடி - அசைகின்ற கொடியினை யுடைய, படாஅர் - புதர்கள், சிதர்வரல் - சிறுதுவலை யோடு வருகின்ற, அசைவளிக்கு - அசையுங்காற்றிற்கு, அசைவந்தாங்கு - அசைந்தாற் போல, துகில் முடித்து - தலைப்பாகை யணிந்து, போர்த்த - சட்டையிட்ட, தூங்கல் ஓங்குநடை - தூக்கத்தினையும் (கடமையிற் கருத்தால் நடக்கின்ற) மேம்பட்ட வொழுக்கத்தினையு முடைய, பெருமூதாளர் - பெரிய முதிர்ந்த ஆண்மையினை யுடைய மெய்க் காப்பாளர், ஏமம் சூழ - காவலாகச் சூழ்ந்துதிரிய,

(வி - ரை.) படர் - படாஅர் - இசைநிறையளபெடை. இப்பாகம் மெய்க்காவலரியல்பினை விளக்கியது. 'சூழ', எனப் பொதுப்படக் கூறினாரேனும் மேல் 'மிலேச்சருழை யராக', என்றமையால் ஈரறைப் பள்ளியின் புறவறை யினது வெளிப்பாகத்தே சுற்றித்திரிய வெனக் கொள்க.

..................உரையா நாவி
னுடம்பி னுரைக்கும் படம்புகு மிலேச்ச
ருழைய ராக நெடுநா வொண்மணி
நிழற்றிய நடுநாண் மண்டமர் நசையொடு
கண்படை பெறாஅது.....................

(ப - ரை.) உரையா நாவின் - பேசமாட்டாத நாவினோடு கூடி, உடம்பின் உரைக்கும் - கையாலும் முகத்தாலும் (செய்யும் செய்கைகளால்) தமது கருத்தைத் தெரிவிக்கும், படம்புகும் மிலேச்சர்-சட்டையிட்ட மிலேச்ச தேசத்தினர், உழையராக - பக்கத்தே சூழ்ந்துதிரிய, நெடுநா ஒண்மணி - நீண்ட நாக்கினையுடைய பிரகாசமாகிய மணியோசை, நிழற்றிய - அடங்கிய, நடுநாள் – நள்ளிரவிலும், மண்டமர் நசையொடு - வீரர்கள் நெருங்கித் தாக்குகின்ற போரின் மீதுள்ள விருப்பத்தால், கண்படை பெறாது – (அரசன்) நித்திரை செய்யாது (விடியு மட்டும் விழித்திருந்து),

(வி - ரை.) மிலேச்சதேசம் – சரஸ்வதி யாற்றின் வடபாலுள்ள தேசம். உழையராக - ஈரறையுள் புறவறையினுட் பாகத்தே சூழ்ந்து திரிய. அரசர்களின் கோயிலில் வேலைகள் ஒடுங்கினால் மணி யொலித்தல் நின்று போதலியல்பாதலின் "ஒண் மணி நிழற்றிய நடுநாள்", என்றார். 'சிறுகண் யானைக்குக் கல்லா இளைஞர் கவளங்கைப்ப, சுரையர் விளக்கமாட்ட, பெருமூதாளர் ஏமஞ்சூழ, மிலேச்சர் உழையராக, மணி நிழற்றிய நடுநாள்,' என்று கூட்டுக.

நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டின்படி பதவுரை எழு

..............மற்றைநாட் பகைவர்ச்
சுட்டிய படைகொ ணோன்விரல் வென்று
நகைதாழ் கண்ணி நல்வலந் திருத்தி, பிறர்,
வேண்டுபுலங் கவர்ந்த விசயத் தாலே
வெல்கொடி யுயரி முதிர்காய் வள்ளியங்
காடுபிறக் கொழிய ......................

(ப - ரை.) மற்றைநாள் - மறுநாட் காலையில், பகைவர்ச்சுட்டிய படைகொள் - பகைவரைக் கொல்லுதற்கென்று கருதியெடுத்து வந்துள்ள வாளாயுதத்தைக் கைக்கொண்ட, நோன்விரல் - வலிய கையாலே, வென்று - எதிரிகளை வெட்டி வென்று, நகை தாழ் கண்ணி - தனக்கு எப்பொழுதும் விளக்கந்தரும்படியான வஞ்சி மாலைக்கு, நல்வலந்திருத்தி - நன்றாகிய வெற்றியை நிலைபெறச்செய்து, பிறர் - எதிரிகள், வேண்டு - எக்காலமும் விரும்பும் படியான, புலங்கவர்ந்த - நிலங்களைக் கைக்கொண்ட, விசயத்தாலே - வெற்றியினாலே, வெல்கொடி - எப்பொழுதும் வெற்றியைக் கொடுக்கும் கொடியை, உயரி - எடுத்துப் பிடித்து, முதிர்காய் வள்ளியங்காடு - தன் பருவம் வந்தவுடன் முதிர்ந்து காய்ந்து போகும் படியான வள்ளிக் கொடிகள் நிரம்பிய காடானது, பிறக்கொழிய - பின்னாலே போகும்படி (முன்னேறிச் சென்று),

(வி - ரை.) மற்றை நாள், அத்து, ஆல் - வரவழைக்கப்பட்ட மொழிகள். விரல் - சினையாகு பெயர். முதிர் காய் வள்ளி - முதிர்ந்த காயையுடைய வள்ளியென்பர் நச்

சினார்க்கினியர்; ஆயின் அங்ஙனம் காயையுடைய வள்ளிச் செடி கிடைத்திலது. இங்கு வென்று திரும்பியமை கூறுகின்றார்.

......................அயிர செறியிலைக்
காயா வஞ்சன மலர முறியிணர்க்
கொன்றை நன்பொன் காலக் கோடற்
குவிமுகை யங்கை யவிழத் தோடார்
தோன்றி குருதி பூப்ப......

(ப - ரை.) அயிர - பொடி மணலில் (முளைத்து) உள்ள, செறியிலை — நெருங்கின இலைகளோடு கூடிய, காயா - காயாம்பூச் செடிகள், அஞ்சனம் மலர — (பெண்கள் கண்களிற் கிடும்) மைபோல் பூக்க, முறியிணர்க் கொன்றை - தளிரோடு கூடிய பூங்கொத்தினையுடைய கொன்றை மரங்கள், நன்பொன் கால - நல்ல பொன் போன்ற தாதுகளைச் சொரிய, கோடல்குவிமுகை - வெண்காந்தளினது மொட்டுக்கள், அங்கையவிழ - அழகிய கையைப் போல் மலர, தோடார் தோன்றி - திரண்ட செங்காந்தள், குருதி பூப்ப - இரத்தம் போல் புஷ்பிக்க,

(வி - ரை.) இங்கு, திரும்பி வரும் வழியியல்பு கூறத் தொடங்குகின்றார். காயா - காசா.

......................வானம்
வாய்த்த வெதிர்செல் வெண்மழை பொழியுந்
திங்களில் வாங்கு தெள்கதிர் வரகிற்
றிரிமருப் பிரலையொடு மடமா னுகளக்
கான நந்திய செந்நிலப் பெருவழி

நச்சினார்க்கினியர் கொண்டுகூட்டின்படி பதவுரை எழு

(ப - ரை.) வானம் வாய்த்த - நல்ல மழையால் செழித்து விளைந்த, எதிர்செல் வெண்மழை - எதிர் காலத்திற் பெய்வதற்குச் செல்கின்ற வெண்மையான மேகம், பொழியுந் திங்களில் - சிறு தூறல்களைத் தூவும்படியான (கர்ப்பவோட்ட காலமாகிய) முன்பனி தொடங்கும் மார்கழிமாதத்திலே, வாங்கு - வளைந்த, தெள்கதிர் - தெளிந்த கதிர்களையுடைய, வரகில் - வரகங்கொல்லையில், திரிமருப்பிரலையொடு - முறுக்குண்ட கொம்பினையுடைய ஆண்மான்களோடு, மடமான் - பெண் மான்கள், உகள - துள்ளி விளையாட, கானம் - முல்லைக்காட்டில், நந்திய - (மேற்கண்ட சாட்சிகளாற்) சிறப்படைந்த, செந்நிலப் பெருவழி - செவ்வல் பூமியிலேயுள்ள பெரிய வழியிலே,

(வி - ரை.) தெள் - வரவமைக்கப்பட்ட மொழி. இச் செந்நிலப் பெருவழியின் காட்சிகள் தலைவன் வேட்கையை மிகுவிப்பனவாயிருத்தல் காண்க. முன்பனிக் காலத்தில் போர்க்குச் சென்று, கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வரும் தலைமகன் வரும் வழியினியல்பைக் கூறும் போது முன்பனிப் பருவமாகிய மார்கழி மாதத்தில் பெய்த தூறலால் கதிர் மடிந்துள்ள வரகங்கொல்லையோடு கூடிய காட்டு வழி யென்பது கால முரணுமாறு தெளிக. இதனை, இங்ஙனங் கொண்டு கூட்டாது பாட்டின் போக்குப்படியே 'எதிர் செல் வெண்மழை பொழியுந் திங்களில் முதிர்காய் வள்ளியங்காடு,' எனக் கூட்டிப்பொருள் செய்யப்பொருந்துமாறு பாட்டின் போக்குப்படி செய்துள்ள பதவுரையிற் காண்க.

105. வலனேர்பு வயிரும் வளையு மார்ப்ப
வீண்டுபெருந் தானையொடு துனைபரி துரக்குஞ்
செலவினர் வினைவிளங்கு நெடுந்தேர் பூண்ட
மாக்க ளாலின மனங்களித் திடவே.

(ப - ரை.) வலன் ஏர்பு - வெற்றியைத் தோற்றுவித்துக்கொண்டு, வயிரும் வளையும் - கொம்பு வாத்தியமும் சங்க வாத்தியமும், ஆர்ப்ப - முழங்க, ஈண்டு பெருந்தானையொடு - திரண்ட பெரிய சேனையோடு, துனைபரி - வேகமாகச் செல்கின்ற குதிரைகளை, துரக்கும் - பின்னும் வேகமாகச் செல்லும்படி தூண்டும்படியான, செலவினர் - போக்கினையுடையவராய் வந்த தலைவருடைய, வினை விளங்கு - தான் எடுத்துக் கொண்ட காரியத்தை முடித்துக் கொடுக்கும்படியான ஆக்கம் நிரம்பிய, நெடுந்தேர் - பெரிய தேரில், பூண்ட - பூட்டப்பட்ட, மாக்கள் - குதிரைகள், மனங்களித்திட - (தலைவியின்) மனம் களிக்கும்படி, ஆலின - ஆரவாரித்தன.

(வி - ரை) கள், மனம் களித்திட - வரவழைக்கப்பட்ட மொழிகள். இப்பாட்டு, தலைவன் போர் காரணமாகப் பிரிய வெண்ணியதனைக் குறிப்பானுணர்ந்த தலைவி பொறுக்க மாட்டாதவளாய்த் துன்புற, அதனைக் கண்ட தலைவன் தேற்ற, அதற்குடம்படாதிருப்ப, பெருமுது பெண்டிர் தெளிவிக்கத் தெளிந்து நீடு நினைந்து ஆற்றியிருக்க, அக்காலத்தே தலைவன் வந்ததைக்கண்ட வாயில்கள் தமக்குள் சொல்லிக் கொண்டது. அஞ்செவி நிறைய ஆலினவென்ன முடிக்க.

# முல்லைப் பாட்டு

## பாட்டாராய்ச்சி

### பொருள்

செந்தமிழிலக்கணக் கடற்குத் தற்காலத்தில் கலங்கரை விளக்கமாக விளங்காநிற்கும் தொல்காப்பிய நூலில், பிறமொழி யிலக்கணங்களில் காணப் பெறாததும் பிற மொழி யிலக்கியங்களிலும் முறையே பொருத்தப் பெறாததுமாகிய பொருளிய லொன்று பொதிந்திருத்தல் ஒரு சார்க்கோடாது நோக்கும் மாந்தர் பலர்க்கும் புலனும். அப்பொருளாவது உலக நெறியாம். அது உலகந் தோன்றியது முதல் ஒரு நெறித்தாய், எல்லோராலும் போற்றப் பட்டு வரும் வாழ்க்கையாம். வாழ்க்கை யெனப் படுவது மக்களின் செயலும் உணர்ச்சியுமாகிய விரண்டன் கூட்டமேயாம். இதனையே பண்டைத் தமிழர் புறப்பொருள் அகப்பொருள் எனப் பிரித்து வைத்துள்ளார். இப் பொருள் எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையு மாய்ந்த வொருவன் அடையவேண்டிய பயனுமென்பது எல்லா மொழியுடையாராலும் கொஞ்ச காலமாக ஒப்புக் கொள்ளப்பட்ட விஷயமாகும். ஆனால், இதனைப் பழந்தமிழர் மட்டும் நெடுங் காலத்திற்கு முன்னரே யுணர்ந்து அவ் விரண்டிலக்கணங்களோடு சேர்த்து வைத்து வழங்கியமை வியக்கற்பாலதே.

### புறப்பொருள்

புறப்பொருளாவது வாழ்க்கைக் கின்றியமையாதன

வும் தன்னோடு ஒன்றுபடும் தன்மை யில்லாதனவும் (அதாவது எனது என்று எண்ணித் தன்னினின்றும் விலக்கிக் கூறத் தக்கனவும்) ஆகிய விஷயங்களை விவரித்துக் கூறுவது. அப்புறப்பொருள் பெரும்பாலும் செல்வத்தினையும் கல்வியையும் சார்ந்து நிற்கும். இது வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண்டினை யென வெழுவகைப்படும். மேற்கண்ட செல்வமும் கல்வியும் மாந்தர்கட்கு வாய்க்கும் பல சந்தர்ப்பங்களையே யிவ்வாறெழுவகைப் படுத்தின ரென்பதுய்த் துணர்க. இப்புறப் பொருளையே வடநூலார் அர்த்த சாஸ்திர மென்பர்.

## அகப்பொருள்

அகப்பொருளாவது வாழ்க்கைக் கின்றியமையாத காதலியுடன் இருமருங்கு பற்றிய கேண்மை கொண்டனாவளாவிநுகரும் இன்பமும் அதற்குக் கருவியாய காட்சி முதலியனவுமாம். இது புறப்பொருள் போல் தன்னினின்றும் வேறுபட்ட பொருள்களின் நுகர்ச்சி போலாது காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டு நுகரும் பெரு நுகர்ச்சியாம். இவண் பொருளென்றது நுகர்ச்சியின் பயனாகிய வுணர்ச்சியை. இது குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை, கைக்கிளையென வெழுவகைப்படும். இவ்வகப் பொருளையே வடநூலார் இன்ப சாஸ்திர மென்பர்.

## புறம் அகம் - இவற்றின் கேண்மை.

இனி, புறமென்பது வெளியுலக (பிரபஞ்ச)த்தையும், அகமென்பது பிரபஞ்சத்திற்குத் தலைவனாக விளங்கும்

இறைவனது தன்மை வாய்ந்த உயிர் அல்லது ஆன்மாவை யுங் குறிக்கும். இவ்வுயிர், உலக வடிவமாகிய வுடலில் அடைபட்டிருப்பதால் அவ்வுலகப் பொருள்களின் தன்மையைப்பற்றியே யிருக்கிறது. இப்பற்றுதலால், உயிரினிலைமை யுலகப் பொருள்களால் வேறுபடுதலும் உலகப் பொருள்களினிலைமை உயிரினடையால் வேறு படுதலும் இயற்கையி லமைந்திருக்கின்றன. கொடு நினைவுகளைக் கொண்ட வொருவன் கோயில் முதலிய புண்ணிய பூமிகளைப் போய்க்கண்ட மாத்திரையிலத்தீ நினைவுகள் அவனை விட்டகலலும், பயங்காளியாகிய வொருவன் பழைய வீரர்களின் சரிதையைப் படித்தவுடன் யுத்தாவேசங் கொள்ளுதலும் உலகப் பொருள்களால் உயிரினிலைமை மாறுபட்டமைக் குதாரணங்களாம். மக்களும் தானுமாகச் சாகத் துணிந்து சென்ற நல்ல தங்கைக்குத் தோன்றிய கிணறு பிணக்குழியாக மாறுவதும் மணக்கோலத்துடன் தோழிமார் தொடர நீரெடுக்கச் செல்லும் மணமகளுக்கு அதே விதமான கிணறு ஜீவவூற்றுப்போல் தோன்றுதலும் உயிரின் போக்கால் உலகப் பொருள்கள் மாறுபடுதலுக்கு எடுத்துக் காட்டுகளாம்.

ஆகவே, இப்பிரபஞ்சத்தையும் உயிரினிலைமையையும் ஐந்து, ஐந்தாகப் பிரித்துத் தமிழர் ஏற்றவாறு புணர்த்தினர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை; புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்பன. இவற்றுள் முன்னைந்தனோடு பின்னைந்தும் தனித்தனி முறையே யியையும். இவை யகப்பொருளினைந்திணையாம்.

இனிப் புறப்பொருள் அங்ஙன மமையுமாறு:—குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை; வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை. இவற்றுள் முன்னைந்தனோடு பின்னைந் தினையு முறையே யியைக்க. இவை புறப்பொருளின் ஐந் திணையாம். இவற்றைப் பின்னாற் காட்டியுள்ள அட்ட வணையால் கண்டறிக.

பண்டைத் தமிழரின் பொருட் பாகுபாடுகள்.

| உலகு | உயிரினிலைமை | |
|---|---|---|
| | புறப்பொருள் | அகப்பொருள் |
| குறிஞ்சி | வெட்சிப்போர் | புணர்தல் |
| முல்லை | வஞ்சிப்போர் | இருத்தல் |
| மருதம் | உழிஞைப்போர் | ஊடல் |
| நெய்தல் | தும்பைப்போர் | இரங்கல் |
| பாலை | வாகைப்போர் | பிரிதல் |

இவற்றுள் அகப்பொருட்குரிய 'இருத்தல்' ஆகிய முல்லையினையும் புறப்பொருட்குரிய பகைமேற் சென்று படை வீட்டில் தங்கி யிருத்தலாகிய வஞ்சியினையும் ஆராய்வோம். இம்முல்லையும் வஞ்சியும் முல்லை நிலத்தில் மக்கட்குள் நிகழும் கற்பாற்றி யிருத்தலாகிய அகப்பொருளையும் படை வீட்டிற் றங்கி யிருத்தலாகிய புறப்பொருளையும் தருதலால் தம்முள்ளொரு போக்கான பொருளையுடையனவாம். ஆகலான் இருத்தலைக் கூறும் இம்முல்லைப்பாட்டினுள் போர் மேற்சென்று தங்கி யிருத்தலாகிய வஞ்சித் திணையை விரவிக் கூறினார் நப்பூதனார். முல்லைத்திணை

யைக் கூறுங்கால் காட்டாகிய விடத்தைப் பெரும்பொழு தாகிய கார் காலத்துடனும், சிறு பொழுதாகிய மாலை வேளையுடனும், அந்நிலத்தையும் காலத்தையும் சார்ந்த மக்கள் மரம் விலங்கு முதலியவற்றுடனும் பொருத்திப்பாச் செய்திருத்தல் பாராட்டத்தக்கது. இங்ஙனம் நிலத்திற்கும் மற்றவற்றிற்கும் பொருள்களைப் பொருத்திக்கொண்டு போவது பண்டைத்தமிழர் வழக்கம். இலக்கியங்களில் கூறப்படுவன பெரும்பாலும் மக்கட்குரியனவே. அம்மக்களின் அகப்போக்குக் கியைந்தவாறு புறப்பொருள்களைத் தமிழர் அமைத்துக் கூறுவதும் போற்றத்தக்கதே. இங்கு இருத்தலாகிய அகநிகழ்ச்சிக்குக் காடாகிய விடமும், மழைக் காலமும் மாலை வேளையும் பொருந்துமாறு:— காடு மக்கள் வழங்குதலின்றி யிருத்தலாலும் வானிருண்டு சோவென மழை பொழிதலாலும் பிரிவாற்றாமையாற் பேதுற்ற நெஞ்சம் உள்ளொடுங்கிப் பிரிவை யெண்ணி யுழலும். இஃதன்றி, கார்கால மழையால் காடு தழைத்து மரங்கள் செழித்து அணிபெற நிற்பது பழைய வாழ்க்கையை ஞாபகமூட்டும். வேனிலால் வறண்ட காடு காரால் தளிர்த்தலைக் காண்டொறும் பிரிவால் வாடிய தலைவிதானும் தளிர்த்தலை யுன்னுவாள். மாலை முதலியன பிரிவாற்றாமையைப் பெருக்குமென்பது யாவரு மறிந்ததேயாம். இங்ஙனம் அகவமைதிக் கேற்றவாறு இயற்கை யமைப்பைப் பொருத்திக் கூறுதல் டென்னிசன் (Tennyson) முதலிய சிற்சில ஆங்கிலப் புலவர் நூல்களிலுங் காணலாம்.

இனி, முல்லைப்பாட்டின்கண் புகுவோம். இப்பாட்டு முல்லை நிலத்தில் பிரிவாற்றியிருக்கும் தலைவியினிலைமை

யைக்கூறி, தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் முல்லை நிலப்பாசறையில் நாற்பெரும் படையுடன் தங்கிப் பகைவரை வென்று தான் குறித்த காலந்தவறாது தலைவியிடம் வந்து சேர்ந்த நிலைமையை யுணர்த்துகின்றது. முல்லைத்திணையில் தலைவி பிரிவாற்றாமையாலுண்டாகிய துன்பங்களைப்பொறுத்து எதிர்கால வாழ்வு எப்படியாமோ வென்று ஐயங்கொண்டு எழுநிலை மாடத்தில் வீற்றிருந்ததற்கேற்ப வஞ்சித்திணையில் தலைவன் அன்று நடந்த போரின் நிகழ்ச்சிகளை நினைத்து நடத்த வேண்டிய போரின் போக்கு யாதோ வென்று சிந்தித்துப் பாடிவீட்டுப் பள்ளியறையில் தங்கியிருந்த வொற்றுமை காணத்தக்கது. இவ்வாறே பிற வொற்றுமைகளையுங் காண்பது பேரின்பம் பயக்கும்.

இனி, இப்பாட்டின்கண் தமிழ் மன்னர் எங்ஙனம் போரியற்றினர் என்பதை யறிவதற்கு வேண்டிய குறிப்புகள் பலவுள. அவை பகைமேற் செல்லு முன் மாற்றார் நாட்டின் கண்ணுள்ள பசுக்களைக் கவர்ந்து வரும்படி படைத்தலைவர்களை யேவுதலும், அப்படைத்தலைவர் தாமெடுத்துக் கொண்ட வினையில் வெற்றியுண்டோ வென்பதை விரிச்சி கேட்டுணர்தலும், பசுக்களைக் கவர்ந்து வருதலும், பகைமேற் சென்றார் முன் வந்துதாக்கிய வெதிரிகளைப் புறங்கொடுத் தோடச்செய்து அவர் நிலத்திற்புகுந்து அங்குள்ள காட்டரண்களை யழித்துத் தமக் கநுகூலமாகக் காட்டாறு சூழ்ந்த வோரிடத்தில்பாசறையமைத்தலுமாம். அப்பாசறைக்கு முள்வேலியை அரணாகக் கோலுவரென்பதை "இடுமுட் புரிசையேமுற வளைஇ (27)," என்பதனால் அறியலாம். இக்காலத்தும் முண் முடிச்சுகளுள்ள

கம்பிவேலிகள் (Barbed Wire Fences)வளைத்துக்கட்டிக் காவல் செய்வது சென்ற மகாயுத்தத்திற் கண்ட விஷயம். இப் பாடிவீட்டைப் பல தெருவுகளாக வேற்படுத்தி நாற் சந்திகடோறும் யானைகளைக் காவலாக நிறுத்துவதனுல் எவ்வளவு பரந்த படைகள் தங்கியிருக்க வேண்டுமென்பது கருதத்தக்கது. இக்கருத்து "வேறுபல் பெரும்படை (43)," என்பதனுல் வலியுறும். அத்தெருவுகளின் மத்தியில் அரசனும் படைத்தலைவர்களும் தங்கியிருக்கும்படி யவனர் (Greeks) பல விதமான மதிட்டிரைகளோடு கூடிய கூடாரங்கள் அமைத்திருந்தன ரென்பது, "கூடங்குத்திக் கயிறுவாங்கு இருக்கை (40)," நெடுங்காழ்க் கண்டங்கோலி யகநேர்பு," என்ற தொடர்களாற் பெறப்படும். இன்னும் அரசனுக் கெனத் தனியே யமைத்த கூடாரத்தில் புலிச் சங்கிலி சூழ விட்டிருப்பதும், பெரியவோரறை சமைத்து அதனுள் மற்ருேரறை யெழுப்பி அதனைப் பள்ளியறை யாக்கி யிருப்பதும் வியக்கத்தக்கனவாம்.

வீரர்கள் தங்கள் கூடாரங்களைச் சுற்றித்தமது விற்களை யுங் குந்தாயுதங்களையு மூன்றி அவற்றின் மேல் முறையே அம்புக்கூடுகளையும் கேடயங்களையும் சேர்த்து வைத்தன ரென்பது இக்காலத்து வீரர்கள் துப்பாக்கிகளைத் தம்மிருப் பிடத்திற்கருகே மும்மூன்ருகச் சேர்த்தூன்றி அவற்றின் மேல் தமது தோற் கச்சைகளையும் பிறவற்றையும் மாட்டி வைப்பதை ஞாபக மூட்டுகிறது. அரசனுக்குக் காவலூழி யர்கள் அமைப்பதில் ஊமைகளான மிலேச்சர்கள் நெருங்கிய காவலர்களாயும், மெய்க்காவலர் அவர்கட்கு வெளியே சூழ்ந்து திரிபவர்களாயும், இவர்களுடன் ஒள்வாள் மங்கைய

ருலவி விளக்குகளைத் திருத்தி யமைப்பவர்களாயும் ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பது போற்றத்தக்கது. அரசன் போர் நடந்த அன்று இரவு வாளாற் புண்பட்டு மிகவுந் துன்பமுறுகின்ற யானையினிலைமைக் கிரங்கியும், எதிரிகளின் யானைகளை வெட்டிச் சாய்த்துத் தனக்கு வெற்றியைக் கொடுத்துப் போரிற்பட்ட வீரர்கள் செயலுக்கு வியந்து வருந்தியும், அம்பால் காயமடைந்து செவிகளைத் தொங்க விட்டுக்கொண்டு புல்லுண்ணாது வருந்தும் குதிரைகளை நினைத்து மனம் புழுங்கியும் தலைமேற் கைவைத்திருந்தமை படைகண் மாட்டு அரசனுக்கிருந்த பேரன்பை விளக்கும்.

மறுநாள் அரசன் பகைவரை வெட்டி வென்று தலைவிக்குக்குறித்த கார்கால வரவையறிந்து திரும்பி விரைந்து வரும் வழியில் எதிர்ப்பட்ட காட்சிகளாகிய சிறு மணலில் மலர்ந்த காயாம் பூக்களும், பொன் போன்ற தாதைச்சிந்துகின்ற கொன்றைப் பூக்களும் வெண்காந்தள் செங்காந்தள் பூக்களும் தலைவியினது கண்களையும் தேமல்படர்ந்த சரீரத்தையும் கைகளையும் அதரங்களையும் அவன் மனத்திற் புகச் செய்யச் செவ்வல் நிலத்திலுள்ள வரகங்கொல்லையில் துள்ளி விளையாடும் ஆண் மான்களும் பெண் மான்களும் கூட்டத்தைத் தலைவன் விரும்புவதற்குக் காரணமாயிருந்தன. முல்லை நிலத்திற்குரிய காரைச் சிறப்பித்துக் கூறும்போது அக்காரினை அந்நிலத் தெய்வமாகிய மாயோனுக் கொப்பிட்டமை கொண்டாடத் தக்கதாம். விரிச்சியில் அந்நிலமகளாகிய ஆய்மகளைக் கூறியதுங் கருதத்தக்கது.

இனி, இப்பாட்டுப் பெரும்பாலும் இயற்சீரும் சிறுபான்மை காய்ச்சீரும் பெற்று ஈற்றயலடி முச்சீரும் ஏனை

யடிகள் நாற்சீருமாகப்பெற்று வந்த நேரிசையாசிரியப் பாவாம். ஆசிரியப்பா - அகவற்பா; இது சங்க நூல் களிற் பெரும்பாலும் காணப்படும்; சற்றேறக்குறைய உரை நடைபோல் நடைபெற்று பொருள்களைத் தெளிவாய் விளக் கக்கூடியது. இதனை யியற்றியவர் நப்பூதனார் என்பதும், இவர் தந்தை பொன் வியாபாரி யென்பதும், இவர் ஊர் காவிரிப்பூம் பட்டினமென்பதும், இவர் பெயரின் அடை மொழிகளால் விளங்குகின்றன. இப்பாட்டுத் தலையாலங் கானத்துச் செருவென்று திரும்பி வந்த பாண்டியன் நெடுஞ்செழியனை மாங்குடி மருதனார் பாடிய மதுரைக் காஞ்சிக்கு முன்னிருத்தலால் அந்நெடுஞ் செழியன் வஞ்சி சூடிச்சென்று தலையாலங் கானத்துப்போர் செய்து மீண்டதுவேயெனக் கருதக்கிடக்கின்றது. இது, "கான நந்திய செந்நிலப்பெருவழி (97)," என்ற வடியில் 'கானம்' என வேண்டா கூறலாக வழிக்கு அடைமொழியாக்கியிருப் பதனைத் 'தலையாலங் கானம்' எனக் கொள்ளின் வலியுறும். ஆயின், தலைவன் முதலியோர் பெயர் கூறாமையென்னை யெனின், அகப்பாட்டினுள் கிளவித்தலைவன் முதலியோர் பெயர் கூறல் மரபன்றாகலான். இதனை, "இயற்பெயர் கிளவித்தலைவற் கிசையார்," என்ற சூத்திரத்தாற் காண்க. கிளவித்தலைவன் - அகப் பொருட்டுறைக்குரிய தலைவன்.

# முல்லைப் பாட்டு

## அருந்தொடரகராதி

அரசிருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை—பகையரசர்கள் தம் மரணகத்தே யிருந்து நடுங்கும்படி முரசவாத்திய முழங்கும் படியான படைவீடு. (அடி-79)

ஈரறை—பாதுகாவலின் பொருட்டு ஒன்றனுள் மற்றொன்றாக வமைக்கப்பட்ட விருக்கை. ஒன்று, இரண்டு முதலிய வெண்ணுப் பெயர்கள் உயிர் முதன் மொழிகளோடு புணருங்காற் பெரும்பாலும் ஈறுகெட்டு முதனீண்டு இவ்விதம் வருகின்றமை கவனிக்கத்தக்கது. (அடி—64)

எதிர்செல் வெண்மழை பொழியுந் திங்கள்—எதிர் காலத்திற்குப்பெய்யச் செல்கின்ற வெண்மேகம் சிறு தூறல் தூவும்படியான முன்பனி தொடங்கும் கர்ப்பவோட்ட காலமாகிய மார்கழி மாதம் (அடி—100)

எழுநிலை மாடம்—எழு நிலைகள் வைத்துக் கட்டப்பட்ட எழு மெத்தைகளையுடைய மாளிகை அல்லது, எழுப்பி நிறுத்தப்பட்ட நிலையையுடைய மாளிகை (அடி—86)

ஒழுகிய தெருவு—ஒழுங்குபட்ட தெருவு. இங்கு செய்வினை செயப்பாட்டுவினை போனின்றது. (அடி—29)

ஓங்கு நிலைக்கரும்பொடு வயல்விளை கதிர் மிடைந்தியாத்த இன்குளகு—ஓங்கி விளைந்து நிற்கின்ற கரும்புத்தீனி

யையும் நன்செய் நிலத்தில் விளைந்த நெற்கதிர்களின் மத்தியில் கலந்து கட்டப்பட்ட இனிய அதிமதுரத் தழைகளையும். (அடி—32)

கடல் பருகி வலன் ஏர்பு—கடலை யுண்டு வலங்கொண் டெழுந்து. ஏர்பு—செய்பு என்னும் வாய் பாட்டு வினை யெச்சம். மேகம் கடனீரைப் பருகி வலங்கொண் டெழுந்து பெய்யும் என்பது இலக்கியங்களிற் கையா ளப்பட்டு வரும் உபசார வழக்கு. (அடி—4)

கண்படை—தூக்கம். படு - இப்பகுதி ஐகாரவிகுதி பெற்றுக் கொல்லுதற்கும் துயில் கொள்ளுதற்கும் பொதுவா யிருத்தல் கருதி 'கண்,' என்னும் அடைகொடுத்து விளக்கினர். (அடி—67)

காட்டவும் காட்டவும்—இப்பதமிரு முறை யடுக்கி வற் புறுத்திக் காட்டியதைக் குறித்து நின்றது. (அடி--22)

குறுநீர்க் கன்னல்—அண்டாவாகிய கொப்பரையிலே நிரப் பிய நீரில் சிறுதுவாரத்துடன் மிதக்கவிட்ட நாழிகை வட்டில் (of Sand Glass) (அடி—58)

கூடங் குத்திக் கயிறு வாங்கிருக்கை—கூடமாகக் கால்களை நட்டுக் கயிற்றை வலித்துக் கட்டின இருப்பிடம் (கூடாரம் Tent) இதனை அக்காலத்தில் படங்கு என் பர் (அடி—40)

சிறுபுன் மாலை—சிறு பொழுதாகிய பிரிந்தாரை வருத்தும் படியான சாயுங்கால வேளை. 'புன்மை' என்ற அடை

மொழி பிரிந்(தனித்திருந்)தாரை வருத்தும் அற்ப குணத்தை விளக்கி நின்றது. (அடி—6)

சோறுவாய்த் தொழிந்தோர்—செவ்விய சோற்றுக் கடனைக் கழித்திறந்த வீரர் (அடி—72)

திருமணி விளக்கம்—மாணிக்கமாகிய விளக்கு (நச்சினார்க்கினியம்) அழகிய சுடரையுடைய விளக்குமாம். (அடி—63)

நீர்செல நிமிர்ந்தமால் போல—வாமனாவதாரங் கொண்டு மாவலிச் சக்கிரவர்த்தியிடம் மூவடி மண் தானம் வாங்கிய காலத்தில் அவன் தாரை வார்த்துக் கொடுத்த நீர் கையிற் பட்டவளவில் திரிவிக்கிரமாவதாரங் கொண்டு வானளாவிய மாயோன் போல. (அடி—3)

நெடிது நினைந்து—தீர்க்காலோசனை செய்து. இதனையே பின்னும் 'நீடுநினைந்து', என்றார் (அடி 76) நீடு நினைந்து—82).

நெடுங்காழ்க் கண்டங்கோலி—நீண்ட குத்துக் கோல்களமைத்துச் செய்யப்பட்ட மதில் திரையை வளைத்துக் கட்டி (அடி—44)

பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்—மாற்றாரைக் கொல்லுதற் கென்றெடுத்த வாளைக்கொண்ட வலிய கை. விரல்-கை; சினையாகு பெயர் (அடி—77)

புலம்பு முத்து—தனித்தனியாகப் பிரிந்த முத்துக்கள் (அடி—23)

புலித்தொடர் விட்ட புனைமாண் நல்லில்—புலிச் சங்கிலி விடப்பட்ட அலங்கரிக்கப்பட்ட அழகிய நல்ல மனை. (அடி—62)

பெரும் பெயல்—கார்காலத்திற் பெய்யும்படியான முதன் மழை. இதனை 'முதற் பெயல்,' எனவும் வழங்குவர். (அடி—6)

மூதூர்—பழையவூர். முதுமை முதலிய பண்புச் சொற்கள் உயிர் முதன் மொழிகளோடு புணரும் பொழுது ஈறு கெட்டு முதனீண்டு வருமென்பது கவனிக்கத் தக்கது. (அடி—7)

விரிச்சி நிற்ப—நற்சொற் கேட்டு நிற்க. இது வெட்சித்திணையிலொருதுறை. விரிச்சி:—வேண்டிய பொருளின் விளைவு நன்கறிதற், கீண்டிருண்மாலைச் சொல்லோர்த் தன்று,' என்பது புறப்பொருள் வெண்பா மாலை. (அடி—11)

வினைவிளங்கு நெடுந்தேர்—எடுத்த காரியத்தை யினிது முடிக்கும் ஆக்கம் நிரம்பி விளங்குகின்ற பெரியதேர். (அடி—103)

வேறுபல் பெரும்படை—மொழி வேறுபட்ட பலவாகிய பெரிய படை. இவர் யவனர், மிலேச்சர், தெலுங்கர் முதலியோர். (அடி—43)

# முல்லைப் பாட்டு.

## அரும்பத வகராதி

(எண் - அடி எண்.)

அசைத்தல்—கட்டுதல் (சேர்த்தல்), 14.

அதிரல்—மோசி மல்லிகை. 51.

அருப்பம்—அரண், 25

அலமரல்—சுழலல், சுற்றிவரல், 13.

இன்னே—இகரச்சுட்டெழுத் தடியாகத் தோன்றும் 'இன்னு' என்னுங் காலப்பெயர் தேற்றவிடைச் சொல் லேற்று நின்றது, 16.

உழை—பக்கம், 66.

எருக்கி—வெட்டி, 25.

எழினி—திரை, 64.

ஏமம்—காவல், 54.

கண்டம்—கண்டத்திரை; பல வர்ணங் கொடுத்துச் சித் திரித்துத் துண்டங்களாகச் செய்யப்பட்ட மதில் திரை (Screen), 44.

கவலை—நாற்சந்தி; பல வழிகள் தம்முட் கூடிப் பிரியு மிடம், 30.

காலுதல்—கக்குதல்; கொட்டுதல், 94

கிடுகு—கேடயம், படல் என்பாருமுளர், 41.

குந்தம்—எறிகோல். 'செங்குந்தர்' என்ற வழக்கையுய்த் துணர்க, 41.

கைப்ப—அங்குசத்தால் வற்புறுத்தியூட்ட. 'கசப்பு', என்பது கயப்பு, கைப்பு என்று மாறி வெறுப்போடு கூடி யுண்ணுதலை யுணர்த்தி நின்றது, 36.

கொடுங்கோல்—(மாடுகளை) விரையச் செலுத்துங்கோல், 15.

கோடு—மலையுச்சி ; இது மலைக்குச் சினையாகு பெயர், 5.

செலவு—செல்கை. இது வழக்கில் பொருட் போக்கினை மட்டுமுணர்த்துகின்றது. இப்பதம் பொருளினியற்கைத் தன்மையினை யுணர்த்திச் செல்வ மெனப் பெயர் கொண்டவாறறிக, 5.

சேர்த்தி—இப்பதம் இகரவிகுதி பெற்று வினையெச்சமாயிற்று. உகரவிகுதி பெற்று வினையெச்சமாவன பெரும்பான்மை, 76.

தடக்கை—பெரியகை. தட—பெருமைப் பொருளை யுணர்த்துமுரிச்சொல் (தொல். சொல். உரி-24), 2

தாம்பு—மாடு ஆடுகட்குக் கட்டிறுகாதபடி கட்டும்படியாக வொருவிதமாகச் செய்த கயிறு, 13.

துமி—துண்டி. இப்பதத்திற்கும் 'துணி' என்னும் பதத்திற்கும் இறுதியிகரமேறிய மெல்லெழுத்தாமாறும் பொருள் ஒற்றுமையுங் காண்க, 70.

நனந்தலை=நனவு + தலை; நனவு—அகற்சிப் பொருளைத் தருமுரிச் சொல். (தொல். சொல். உரி-80),

நாழி— உள்ளே துளையை யுடைய பொருள்: இஃது அத் தன்மைத்தாகிய மூங்கிலாற் செய்யப்பட்ட அளவு கருவியைப் பின்னுணர்த்திற்று; படி. இம்முகத் தலளவைப் பெயர் 'நாழிகை வட்டில்' என்ற கருவி யாற் காலத்தைக் கணக்கிட நேர்ந்த பொழுது 'நாழிகை' யென்ற பெயரின் பொருளை யுணர்த்தலா யிற்று. இச் சொல்லின் கருத்து 'நாளம்' என்ற வட சொல்லில் பொருந்தி யிருப்பதுங் காணத் தக் கது. 9.

நிரைத்து—வரிசைப்பட வைத்து, 41.

பசலை—'பசுமை' யென்ற பண்புப் பகுதியினின்றுந் தோன்றிய விளமையைக் குறிக்குமொரு சொல், 12.

படம்—சட்டை (மெய்ப்பை), 66.

படாஅர்=படர்-படர்வது; புதர், 51

பனி—குளிர்ச்சி, இஃது இக்காலத்து வழக்கில் குளிரைத் தரும்படியான சிறு நீர்த்திவலை (dew) களைக் குறிக் கிறது. குளிராலுண்டாம் நடுக்கத்தினையும் வருத் தத் தினையும் 'பனித்தல்' என இப்பதமே குறித்து நிற்கும். இக்கருத்து "அரசிருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை", என்று பிற்கூறும் வகையால் விளங்கும், 4.

பாடி—முல்லை நிலத்தூர்களின் பொதுப் பெயர். இங்கு பாசறையைக் குறித்து நின்றது. இதனைப்

பாசறை யென்னுது பாடி யென்றது முல்லை நிலத்தி னிகழும் வஞ்சிப்போ ரென்பது கருதி, 28,

பாடு—ஒலி; முதனிலைத் தொழிற் பெயர். 'தோன்று' என்று பொருள் படும் 'படு' என்ற முதனிலையினின்றும் தோன்றிய தெனவும் கருதற் கிடமுண்டு. 'அகப்பட் டது', என்பதிலுள்ள 'படு' என்ற சொல்லையாராய்க. 'புறப்படு', என்பது புறப்பாடு', என மாறுதலையும் நோக்கு, 4.

புரிசை—வேலி; மதில், 27

புலம்பு—தனிமை. 'இதனை, புலம்பேதனிமை', என்ற (தொல். சொல். உரி 33) சூத்திரத்தாற்காண்க. இது பின் தனிமையாலுண்டாம் மனவருத்தத்திற்கும் வாய்ச் சொற்களுக்குமாயது, 23.

புலித்தொடர்—நெருங்கினுரைப் புலிபோல் வருத்தும் சங்கிலி. அல்லது, புலியுருவத்தை யமைத்துச் செய்த சங்கிலி, 62.

புழை—சிறுவாசல், 26.

புறவு—முல்லைநிலம். இதனை, முல்லை யென்னுது புறவென் றது தான் கூறுவது புறப்பொருள் என்பது தோன் றுதற்கு, 24.

பெருமூதாளர்—மெய் காவலர் (Body Guards), 54.

பொறித்த—தரித்த. பொறித்தல்—ஒன்றினிடத்தி லொன் றைப் பதியும்படி வரைதல்; தீட்டல். இங்கு இப்